பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 11 சனிக்கிழமை 25.01.2020 கதிர் 81

இனிது ரகசியம் அல்ல!

போதிய கல்வித் தகைமை பெறாத ஒருலட்சம் பேருக்கு அரச சேவையில் உடனடியாக வேலை வாய்ப்பு வழங்கும் ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷவின்திட்டத்தின் கீழ் அரசியல் மயப்படுத்தப்பட்ட பணிகளில் நேரடியாகப் படைத் தரப்பு பக்கம் 02



# காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே, எப்போது, யாரால் கொலையுண்டனர் என்பதைக் கூறவேண்டும் கோட்டா!

## வலியுறுத்துகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஜன.25

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதி தாம் நடத்திய விசாரணை பற்றிய முழு விவரங்களையும் முதலில் வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவ்வாறு அவர் நம்பத்தகுந்த விசாரணை எதனையும் நடத்தவில்லையானால் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அவர் வழிவகுக்க வேண்டும்.

- இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார். பக்கம் 03

# காணாமல் ஆக்கப்பட்டோரை கோட்டாபயவே தரவேண்டும்!

## உறவினர்கள் பகிரங்கக் கோரிக்கை



மன்னார், ஜனவரி25

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே கொண்டு வந்து தரவேண்டும் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு கூறினார். பக்கம் 03

## ஊடகவியலாளர்கள் பலர் நாட்டை விட்டுத் தப்பினர்

### புதிய அரசின் வருகையை அடுத்து

கொழும்பு, ஜன.25

புதிய அரசு பதவியேற்று 60 நாள்களில் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் பக்கம் 03

## 28,000 குடும்பங்களுக்கு வடக்கு – கிழக்கில் வீடு

கொழும்பு, ஜன. 25

வடக்கு - கிழக்கில் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டத்தைச் சமூக பக்கம் 03

## விரக்தியால் நாட்டைவிட்டு வெளியேறுகிறார் ஜயம்பதி!



கொழும்பு, ஜன.25

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன, அரசியலில் பக்கம் 02

## யாழ்.மாவட்டத்தில் 689 திட்டங்களை முன்னெடுக்க 87 கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் முன்மொழியப்பட 689 அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்காக கோரப்பட்ட 87 கோடி ரூபா நிதியில் ஒருபகுதியான 17.4 கோடி ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

மக்களால் பக்கம் 03

## யாழ்.மாநகர சுகாதார ஊழியர்கள் தொடர்ச்சியாக உணவுத் தவிர்ப்பு

### நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி



யாழ்ப்பாணம், ஜன. 25

நிரந்தர நியமனம் வழங்கப்படும்வரைத் தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார ஊழியர்கள். பக்கம் 03

## பொலிஸாரின் பதிவை தடுத்து நிறுத்தினீர்களா?

### மனோவிடம் துருவியது பொலிஸ்

கொழும்பு, ஜன. 25

கொழும்பில் வீடுகள் தோறும் பொலிஸார் மேற்கொண்ட விவரக்கோவை திரட்டு என்ற பொலிஸ் பதிவை ஏன் பக்கம் 02

## மொட்டுச் சின்னத்தில் மைத்திரிபால போட்டி

கொழும்பு, ஜன. 25

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட முன்னாள் ஜனாதிபதி பக்கம் 03

## பொது நிதிக் குழுவின் தலைவராக சுமந்திரன்



கொழும்பு, ஜன. 25

பொது நிதிக் குழுவின் தலைவராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பக்கம் 03

காலைக்கதிர்



# ஏழாலையில் கசிப்பு உற்பத்தி முறியடிப்பு



யாழ்ப்பாணம், ஜன. 25

ஏழாலையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டமையுடன், அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட 70 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏழாலையில் ஒதுக்குப் புறமான இடத்தில் இந்தக் கசிப்பு உற்பத்தி நேற்று வெள்ளிக்கிழமை முறியடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு 70 லீற்றர் கசிப்பு, சுமார் ஆயிரம் லீற்றர் கோடா, வெற்றுத் தகரங்கள், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் கம்பிகள் உள்ளிட்டவையும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

சந்தேக நபர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சேனா தீரவின்கீழ் இயங்கும் சிறப்புப் பொலிஸ் பிரிவே இந்தக் கசிப்பு உற்பத்தியை முறியடித்தது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

# அஜித் பிரசன்னவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 25

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஓய்வு பெற்ற முன்னாள் மேஜர் அஜித் பிரசன்னவை பெப்ரவரி 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கக் கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த நாட்களில் மேஜர் அஜித் பிரசன்ன பல்வேறு அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விரக்தியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட விரக்தி காரணமாகவே தமது எம்.பி. பதவியை இராஜினாமா செய்துள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர் தனது குடும்பத்துடன் வெளிநாடு செல்ல தீர்மானித்துள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 20ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதாக அவர், சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கடிதத்தைக் கையளித்திருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணியான ஜயம்பதி விக்கிரமரத்ன 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுக்களில் அங்கம் வகித்த அவர், கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல் தொடர்பான நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவில் அங்கம் வகித்திருந்தார்.

கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தமையைத் தொடர்ந்து, அந்தப் பதவிக்கு சமன் ரத்னபிரிய பெயரிடப்பட்டுள்ளார். (ஐ)

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து நிறுத்தினீர்கள்? இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கண்டு பிடிக்க முடியாமல் போனதை ஏற்றுக்கொள்கிறீர்களா? – இப்படிக் கேட்டுத் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசனிடம் விசாரணையை மேற்கொண்டனர் குற்றவியல் புலனாய்வு திணைக்களப் பொலிஸ் அதிகாரிகள். எம்.பியின் வீட்டுக்குச் சென்று இது தொடர்பில் அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்துள்ளனர்.

இதுபற்றி மனோ கணேசன் தெரிவிக்கையில் –

கொழும்பில் தமிழர் செறிந்து வாழும் கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, மட்டக்குளி, முகத்துவாரம், கொள்ளுப்பிட்டி, தெஹிவளை, கல்கிசை, கொகுவளை, கிருலப்பனை, தெமட்டகொடை, மருதானை, புறக்கோட்டை மற்றும் கொழும்புக்கு வெளியே வத்தளை, நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் வலயப் பிரதேசங்களைக் குறிவைத்துப் பொலிஸார், விவரக்கோவை திரட்டு என்ற பொலிஸ் பதிவை மேற்கொள்ள முயற்சிப்பது, காலம் காலமாக நடைபெறும் கைங்கரியமாகும். இதை நான் எப்போதும் எதிர்த்துத் தடுத்து நிறுத்தியிருக்கிறேன். இதற்கு முந்தைய மஹிந்த ஆட்சியிலும் சரி, அதற்கு பின் வந்த நமது ஆட்சியிலும் சரி, இதற்கு நான் இடம் கொடுத்தவனே இல்லை.

சந்தேக நபர்கள் மீது விசாரணை மேற்கோள்வது ஒன்று. ஆனால், அனைத்து வீடுகளுக்கும் சென்று விவரக்கோவை திரட்டுவதும், அதிலும் தமிழ் குடும்பங்களைக் குறி வைப்பதும் இன்னொன்று. பொலிஸார் திரட்டும் விவரக்கோவைகள், மூன்றாம் தரப்பு சமூக விரோதிகளிடம் சென்று சேருகின்றன என நான் சந்தேகப்படுகின்றேன். இதை நான் அனுமதிக்க முடியாது.

இந்நிலையில், பொலிஸ் பதிவை நான் தடுத்து நிறுத்தியதால்தான், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு குற்றவாளிகளை முன்கூட்டியே கைது செய்ய முடியாமல் போனது என்ற குற்றச்சாட்டை அவ்வேளை கொழும்பில் பிரதிப் பொலிஸ் அதிபராக இருந்தவர், ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் விசாரித்து வரும் விசேட விசாரணை குழுவிடம், எனக்கு எதிராக தெரிவித்துள்ளார்.

இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் குற்றவியல் விசாரணை பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரமராய்ச்சி திலகரத்ன, என்னிடம் விசாரணை வாக்குமூலம் பெறவேண்டும் என அறிவித்து நேரம் கோரி இருந்தார். அதிகாரிகளை எனது வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பெறும்படி நான் கூறியிருந்தேன். இதன்படி சி.ஐ.டி. பிரதம பரிசோதகர் ஹெல உடகே தலைமையிலான பொலிஸ் குழுவினர் என் வீட்டுக்கு வந்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

எனது வாக்கு மூலத்தில் –

இது மொட்டந்தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடும் வேலை. கடைசியாக கொழும்பில் தமிழ் மக்களை நோக்கிய பொலிஸ் பதிவுகள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டது கடந்த வருடம் ஜனவரியில் என எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அப்போது, இதுபற்றி வழமைப் போல், அனைத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதி பொலிஸ் மாதிபர், பொலிஸ் மாஅதிபர் ஆகியோருடன் மட்டுமல்ல, பொலிஸ் துறையை தன் கையில் வைத்திருந்த, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் அமைச்சரவையில் இந்த விடயத்தை எழுப்பி, விவாதித்து இருந்தேன். சந்தேக நபர்கள் மீது விசாரணை மேற்கொள்ளுங்கள். ஆனால், வீடு வீடாக, குற்றவாளிகளை போன்று, தமிழரைத் தேடிச் சென்று ஒட்டு மொத்தமாக பொலிஸ் பதிவு செய்யும் நடைமுறையை உடன் முடிவுக்கு கொண்டுவரும்படி கூறி இருந்தேன். அதன்படி அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இது நடந்து, நான்கு மாதங்களுக்கு பின்னரே ஏப்ரல் குண்டு வெடிப்பு நிகழ்ந்தது. இந்தக் குண்டு வெடிப்புக்கு வந்த நபர்கள் கொழும்பில் ஜனவரி மாதமே வந்து தங்கி இருந்திருப்பார்கள் என்பது நம்ப முடியாத பழிவாங்கல் சிந்தனை. உண்மையில், இந்த குண்டு வெடிப்பு தொடர்பிலும், குண்டு வெடிப்பு பயங்கரவாதி சாஹரான் கும்பல் தொடர்பிலும், நட்பு நாடு என்ற முறையில் இந்தியப் புலனாய்வு துறை முன்கூட்டிய தகவல்களை இலங்கை பொலிஸ் துறைக்கு வழங்கி இருந்தது. குண்டு வெடிப்பு நிகழ சில மணிகளுக்கு முன்கூட இடம், நேரம் உள்ளிட்ட தகவல்களை வழங்கி இருந்தது. இத்தகவல்களை இலங்கை குற்றவியல் புலனாய்வுத் திணைக்களம் தேடிக் கண்டு பிடிக்கவில்லை. இந்தியப் புலனாய்வு துறையே இலங்கைக்கு உரிய தகவல்களைக் கொடுத்தது. இப்படிக் கொடுக்கப்பட்ட துல்லியமான தகவல்களைக் கூட சரியாகப் பயன்படுத்தி, குற்றங்களைத் தடுத்து நிறுத்தி, அப்பாவி மக்களைக் காப்பாற்றி, குற்றவாளிகளைக் கைது செய்ய, இலங்கைப் பொலிஸாரால் முடியவில்லை. சம்பவம் நடைபெற்ற பொலிஸ் வலய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பிரதி பொலிஸ் மாஅதிபர், பொலிஸ் மாஅதிபர், பொலிஸ் துறையைத் தன் கையில் வைத்திருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகியோர் தம் கடமைகளில் இருந்து முற்றாகத் தவறியுள்ளனர். தமது கடமை தவறலை மறைக்கவே, நம்பி வாக்களித்த மக்களுக்காகக் கடமையை செய்யும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான என் மீது திட்டமிட்டு பழிவாங்கும் முகமாக அபாண்டமாக இந்தக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது எனக் கூறி, எனது வாக்குமூலத்தை எழுத வைத்து, கையெழுத்திட்டுக் கொடுத்தேன்– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்தப்படப் போகின்றது என இப்பத்தியில் ஓரிரு வாரங்களுக்கு முன் எச்சரித்திருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

என் எச்சரிக்கைப்படி விடயங்கள் கனகச்சிதமாக அரங்கேறுகின்றமை இப்போது யதார்த்தத்தில் நடந்து வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகப் பிரிவு ஒவ்வொன்றிலும் தலா முந்நூற்றியம்பது முதல் நானூறு பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக இத்தகைய வேலைவாய்ப்புகள் உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு காமதேனு போன்ற சந்தர்ப்பம். தங்கள் பரிந்துரைகள் மூலம் தமது ஆள்களுக்கு இத்தகைய நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதன் வாயிலாக அவர்கள் அரசியல் செல்வாக்கு, வருமானம் எல்லாம் ஈட்டிக்கொள்வது இந்த வழியில்தான். பொது மக்களும் – வாக்காளர்களும் – பெரும்பாலும் அரசியல்வாதிகள் பின்னால் அலைவது இத்தகைய அரச நியமனம் வேண்டித்தான்.

பிரதேசங்கள் தோறும் அரசியல்வாதிகள் – வாக்காளர்கள் இடையிலான 'அன்புப் பிணைப்புக்கு' அடிப்படையாக விளங்கும் அம்சங்களில முக்கியமானது அரச வேலைவாய்ப்புக்களும் அவற்றுக்கான நியமனங்களும்தான்.

ஒரு லட்சம் பேருக்குப் புதிதாக அரச வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுத்தால் குறைந்தது சுளையாக ஐந்து லட்சம் வாக்குகளைப் புதிதாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று நம்பலாம்.

அதனால் பிரதேச ரீதியாக இந்த நியமனங்களைப் பெற்றுக்கொடுப்பதிலும் அதற்கான பரிந்துரைகளைச் செய்வதிலும் உள்ளூர் அரசியல்வாதிகள், எம்.பிக்கள், அவர்களின் பினாமிகள் ஆலாய்ப் பறப்பர் என்பது எதிர்பார்க்கப்படுவதுதான்.

ஆனால் அதற்கு இடமளிக்காமல் உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் அவ்வப்பகுதி படை அதிகாரிகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த நியமனங்களை முன்னெடுக்க புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முயல்கின்றார் என நான் கோடி காட்டியிருந்தேன்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்போரிலிருந்து 350 முதல் 400 பேரைத் தெரிவு செய்வதற்காக ஓர் உயர்மட்டக் குழு நியமிக்கப்படும். அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவின் உயர் அரச அதிகாரிகள் மற்றும் அந்தந்தப் பகுதி பிரதேச பொலிஸ் அல்லது படை அதிகாரிகள் அக்குழுவில் இருப்பர் என்று ஜனாதிபதியின் தரப்பினால் சமிக்ஞை காட்டப்பட்டுள்ளது.

அதாவது சிவில் அதிகாரிகள் அல்லது உத்தியோகத்தர்களின் பதவி வெற்றிடங்களுக்கு – அரச வெற்றிடங்களுக்கு – ஆள்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைக் குழுவில் சேவையில் இருக்கும் படை அதிகாரியும் இருப்பார்.

இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் அரச உத்தியோகத்தர்களை சிவில் சேவைப் பணிக்குத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகளை படை அதிகாரிகளும் இனி நடத்துவர்.

படை அதிகாரிகளுக்கும் சலாம் அடித்தால்தான் இனி அரச நியமனம் என்ற நிலைமை. அரச நியமனங்கள் கேட்டு இது வரை அரசியல்வாதிகளை நாடிய பொதுமக்கள் இனிமேல் படை அதிகாரிகள் காலடியில் விழுந்து கிடக்கும் அவல நிலைமை வரலாம் என்று தெரிவித்திருந்தேன்.

இப்போது இந்த ஒரு லட்சம் நியமனங்களையும் வழங்கும் செயலணியின் பணிப்பாளர் நாயகமாக–அந்த முழுப் பணிக்கும் பொறுப்பாக – ஓய்வுபெற்ற படைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராய்ச்சியை நியமித்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

நந்த மல்லவராய்ச்சி பதில் இராணுவத் தளபதியாக இருந்தவர். வடக்குக்கு அவர் புதுமுகம் அல்லர். யுத்த காலத்தில் வடக்கில் நிலைகொண்டிருந்த 52 ஆவது படைப்பிரிவின் பொதுக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் சுபாஸ் ஹோட்டல் கட்டடத்தில் அப்போது 52 ஆவது டிவினின் தலைமையகம் இருந்தது. அங்கிருந்து தென்மராட்சி மற்றும் பகுதிகளில் நிலைகொண்டிருந்த 52 ஆவது டிவினை வழிநடத்தியவர்.

இராணுவ சேவையில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முதலில் சட்டம் ஒழுங்கு அமைச்சினதும் பின்னர் விளையாட்டுத் துறை அமைச்சினதும் செயலாளராக நியமிக்கப்பட்டவர்.

விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 39 லட்சம் ரூபா ஊழல் விவகாரம் ஒன்று தொடர்பில் நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர் இவரும் நிதிக் குற்றவியல் பிரிவுக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டவர்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அவருடனும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுடனும் சேர்ந்து பணியாற்றியமைக்காக நல்லாட்சி அரசின் கீழ் தொந்தரவுக்குள்ளான முன்னாள் படை அதிகாரிகளில் இவரும் ஒருவர். அதற்குப் பரிசாக இப்போது ஒரு லட்சம் பேரை குறுகிய காலத்தில் பணிக்குச் சேர்க்கும் செயலணிக்குப் பொறுப்பாளர் என்ற வெகுமதி அவருக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது போலும் .

– மின்னல்–

## காணாமல் ஆக்கப்பட்டோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளிடம் இருந்து ஒரு வார்த்தை வராதா என்ற ஏக்கத்துடன் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எமது மக்களின்நம்பிக்கைகளைத் தகர்க்கும் வகையில் காணாமற் போயுள்ளமக்கள் போரின் போது இறந்துவிட்டனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் வதிவிட பிரதிநிதியிடம் கூறியிருக்கிறார் என சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

இறந்தவர்களை மீண்டும் தன்னால் கொண்டுவரமுடியாது என்றும் அவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் எதிர்பார்ப்புக்கள், துயரங்கள் எதனையும் கவனத்தில் கொள்ளாமல் பொறுப்பற்ற முறையில் சர்வ சாதாரணமாகக் கூறியிருக்கிறார் அவர்.

தமது உறவினர்கள் எங்காவது ஓர் இடத்தில் உயிருடன்தான் இருக்கின்றார்கள் என்றும் என்றாவது ஒருநாள் அவர்களின் குரல் தமது காதுகளுக்குக் கேட்கும் என்றும் பல வருடங்களாக துய ரத்துடன் வாழ்ந்துவரும் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி இடும் நோக் கத்துடன் ஜனாதிபதி இது தான் உண்மை என்று தனக்கு தெரிந்த உண்மைகளின் அடிப்படையில் காணாமற்போனவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறியுள்ளார்.

ஆனால் ஜனாதிபதி எதிர்பாா்ப்பதுபோல இந்தச் செய்தி போரில் பொறுப்புக்கூறல் விதி முறைகளுக்கு அமைவானதாக இல்லை. காணாமற்போயுள்ளவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று கூறியுள்ள ஜனாதிபதி காணாமற் போயுள்ளவர்கள் எங்கே, எப்போது, யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதனையும் எந்த விசாரணையின் அடிப்படையில் அவர் இதனை கூறியிருக்கிறார் என்பதை யும் ஐ.நா. மனிதஉரிமைகள் சபைக்கும் சர்வதேச சமூகத்துக் கும் நாட்டு மக்களுக்கும் கூற வேண்டும்.

விசாரணை ஒன்றை நடத்தியிருந்தால் அது எப்போது, யாரால் நடத்தப்பட்டது என்பதனையும் அவர் வெளிப்படுத்தவேண்டிய பொறுப்புக்கு தற்போது உள்ளாகியிருக்கின்றார். முக்கியமாக காணாமற்போனோர் பலரை இராணுவத்தினரிடம் கையளித்த உறவுகள், நண்பர்கள், நலன் விரும்பிகள் பலர் இன்னமும் உயிரோடு இருக்கின்றார்கள். விசாரணைக்கு அவர்கள் எவரையும் அழைத்தனர் எனக் கூறப்படவில்லை. பின் எவ்வாறான விசாரணையின் அடிப்படையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார் என்று மக்கள் அறிய உரித்துடையவர்கள்.

அதேவேளை, 20,000 க்கும் அதிகமான மக்கள் காணாமற் போயுள்ளனர் என்பது யாவரும் அறிந்ததே. அவர்கள் போரில் இறந்துவிட்டார்கள் என்று ஜனாதிபதி கூறியிருப்பது இறுதிப்போரில் நடைபெற்ற போர்குற்றங்கள் மற்றும்மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இதனை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் உறுப்புநாடுகள் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

உண்மையில் குறித்த தீர்மானம் பற்றியும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அடுத்து எடுக்கப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாகவும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனே அந்த உறுப்பு நாடுகளுக்குச் சென்று எமது விடயத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்துவதின் அவசியம் பற்றிப் பேசி வரவேண்டும்.

ஜனாதிபதியின் கூற்று இவ்வாறான நடவடிக்கைகளை மிக அவசியம் ஆக்கியுள்ளது. இக்கூற்றில் இருந்து அரசு ஜெனீவாவில் என்ன கூற போகின்றது என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

காணாமற்போனவர்களில் மூன்று வகையானவர்கள் இருக்கிறார்கள். முதலாவது வகையினர் போரின் போது காணாமற்போனவர்கள், இரண்டாவது வகையினர் போர் வலயத்துக்கு அப்பால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள், மூன்றாவது வகையினர் போர் முடிந்த பின்னர் இராணுவத்தில் பொறுப்புள்ள அதிகாரிகளின் வேண்டுகோளை ஏற்று அவர்களிடம் சரண் அடைந்தவர்கள் அல்லது பெற்றோர், உறவினர்களினால் ஒப்படைக்கப்பட்டவர்கள்.

இவர்கள் அனைவருமே இறந்துவிட்டார்கள் என்பதே ஜனாதிபதியின் கூற்றின் அர்த்தம். இன்றைய ஜனாதிபதியே போர் நடைபெற்றபோது பாதுகாப்புச் செயலாளராக இருந்தமையுடன் தானே போரை வழிநடத்தி முடிவிற்கு கொண்டுவந்தார் எனப் பல தடவைகள் கூறியிருக்கின்றமையால் அவரின் கூற்றில் உண்மையிருக்கக்கூடும்.

ஆகையினால்தான் காணாமல் ஆக்கப்பட்ட இத்தனை பல்லாயிரக்கணக்கான மக்கள் எப்படி இறந்தார்கள் என்ற பின்னணி சர்வதேச சமூகத்துக்கும் எமது மக்களுக்கும் முறையான சர்வதேசசுயாதீனவிசாரணைஒன்றின் ஊடாக தெளிவுபடுத்தப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றேன்.

இதுவே காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மன அமைதியை ஏற்படுத்தும். இத்தகைய ஒரு பொறுப்புக்கூறல் நடவடிக்கையே நல்லிணக்கம் ஏற்படுத்த வழிவகுக்கும்.

ஆகவேதான் ஜனாதிபதி தாம் நடத்திய விசாரணை பற்றிய முழு விபரங்களையும்முதலில்வெளிப்படுத்த வேண்டும் அல்லது அவ்வாறு அவர் நம்பத்தகுந்த விசாரணை எதனையும் நடத்தவில்லையானால்சர்வதேசவிசாரணை ஒன்றுக்கு அவர் வழிவகுக்க வேண்டும். அக்கால கட்டத்தில் போர் முடிந்த பின்னர் எமக்குக் கிடைத்த தகவலின் படி இராணுவத்தினரே மக்களைச் சரணடையச்சொன்னார்கள் என்றும் இராணுவத்தினர் அவர்களைப் பாரம் எடுத்தார்கள் என்றும் கூறப்பட்டது.

அப்படி என்றால் பாரமெடுத்த இராணுவத்தினரைக் கூப்பிட்டு அவர்கள் பொறுப்பேற்றவர்களுக்கு என்ன நடந்தது என்று ஏன் கேட்கவில்லை என்பதையும் ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எமது பிள்ளைகளும் உறவுகளுமே. ஆனால் தற்போது புதிய அரசு வந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரும் இல்லை என ஜனாதிபதி கூறுகின்றார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இல்லையென்றால் அவர்கள் எங்கே என்பது அவருக்குத்தான் தெரியும். அவர்களுக்கு என்ன நடந்தது, என்ன செய்தார்கள் என்பதும் அவருக்கே தெரியும். அவருடைய காலத்திலேயே உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பிள்ளைகளே காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தின் போது உயிரிழந்த பிள்ளைகளை நாங்கள் கேட்கவில்லை. இறந்த உறவுளைக் கேட்டு நாங்கள் போராடவில்லை. உயிரோடு காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளைக் கேட்டே நாங்கள் போராடுகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே? அவர்கள் எங்கு இருக்கின்றார்கள்? அவர்களுக்கு என்ன நடந்தது? – என்பதனைக் கேட்டே நாங்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். அரசு இதற்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும். அவருடைய ஆட்சிக் காலத்திலே பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பிடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்கூறியதாலேயே அனைத்துமே நடந்துள்ளன என்று நாங்கள் உறுதியாக நம்பியிருக்கின்ற நிலையில் ஜனாதிபதி காணாமல் ஆக்கப்பட்ட ஒருவரும் இல்லை என்று கூறியுள்ளார். பிடித்துச் செல்லப்பட்ட பிள்ளைகள் எங்கே என்று இவருக்குத் தெரியும்.

இவருடைய ஆட்சியிலேயே நடந்துள்ளது. எங்களுடைய பிள்ளைகள், உறவுகள் எங்கே என்றுதான் நாங்கள் கேட்கின்றோம். எமது பிள்ளைகள் என்ன நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் பிடித்துக்கொண்டு போன எங்கள் பிள்ளைகளும், உறவுகளும் உங்களிடம் இருக்கின்றார்கள் எனக் கூறியதன் நம்பிக்கையிலேயே நாங்கள் இருக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் என்ன நிலையில் இருந்தாலும் எங்களிடம் ஒப்படையுங்கள். தற்போது கூட புலனாய்வுத்துறையினரால் (சி.ஐ.டி) எங்களுக்குப் பிரச்சினையாகவே உள்ளது. காலை நேரத்தில் வீடுகளுக்கு வருகின்றனர்.

அவர்களின் முகங்களிலே நாங்கள் முழிக்க வேண்டியதாக இருக்கின்றது. இன்று எங்கே போகின்றீர்கள்? என்ன கலந்துரையாடல் உள்ளது? எப்போது ஜெனிவாவுக்கு போகின்றீர்கள் எனக் கேள்வி கேட்கின்றனர். இவர்கள் ஏன் எங்களை விசாரணை செய்ய வேண்டும்? இவர்கள் எங்களை விசாரணை செய்ய வேண்டிய அவசியமில்லை.

எங்களை அவர்கள் விசாரணை செய்கின்றார்கள் என்றால் நாங்கள் அவர்களிடம் கேட்கின்றோம் காணாமல் ஆக்கப்பட்ட எங்களுடைய பிள்ளைகளை மீண்டும் உங்களுடன் கொண்டு வந்து தந்தீர்கள் என்றால் நாங்கள் ஏன் ஆர்ப்பாட்டம் செய்கின்றோம், ஜெனிவா செல்லப்போகின்றோம்? நாங்கள் எங்கும் போகவேண்டிய அவசியம் இல்லை.

எனவே காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை ஜனாதிபதியே கொண்டு வந்து தரவேண்டும் – என்றார். (ஐ)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நல்லாட்சியின் நான்கரை வருடகாலப்பகுதியில் எந்தவொரு ஊடகவியலாளரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை.

ஆனால் புதிய அரசு பதவியேற்று 60 நாட்களில் ஊடகத்துறையுடன் தொடர்புடைய பலர் நாட்டை விட்டுச் வெளியேறியுள்ளனர்.

தற்போதைய அரசும் மக்களைப்போலவே ஊடகங்களையும் அச்சுறுத்தி நாட்டுக்குள் ஒழுக்கத்தை நிலை நாட்ட முயல்கின்றது.

ஆனால் சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தினால் மாத் திரமே ஒழுக்கத்தை நிலை நாட்ட முடியும் – என்றார். (ஐ)

## யாழ். மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்மொழியப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கான இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதால் அவற்றை ஆரம்பிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளரால், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசால் கொண்டுவரப்பட்ட சப்ரி கமக் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட 435 கிராம அலுவலகர் பிரிவுகளில் முன்னுரிமை அடிப்படையில் மக்களால் கோரப்பட்ட 689 அபிவிருத்தித் திட்டங்கள் முன்மொழியப்பட்டன.

இதில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 9, வேலணை பிரதேச செயலர் பிரிவில் 48, ஊர்காவற்றுறையில் 26, காரைநகரில் 10, யாழ்ப்பாணத்தில் 48, நல்லூரில் 77, சண்டிலிப்பாயில் 35, சங்கானையில் 37, உடுவிலில் 60, தெல்லிப்பளையில் 64, கோப்பாயில் 54, சாவகச்சேரியில் 79, கரவெட்டியில் 57, பருத்தித்துறையில் 55, மருதங்கேணியில் 30 அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்குமாறும் வேலைகளின் முன்னேற்ற அறிக்கைக்கு அமைய மிகுதி நிதி விடுவிக்கப்படும் என்றும் நிதி அமைச்சின் செயலாளரால் மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகனுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

## மொட்டுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார் என அறியமுடிகின்றது.

தாமரை மொட்டு அரசியல் கூட்டணியைக் கடந்தகாலங்களில் கடுமையாக விமர்சித்து வந்த அவர் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டாலும் தாமரை மொட்டுக் கூட்டணியின் பொலநறுவை மாவட்ட பிரதான வேட்பாளராக அவர் நியமிக்கப்படும் வாய்ப்பில்லையெனவும் மாவட்டத் தலைமைப் பொறுப்பு அவருக்கு வழங்கப்படுவதில் பல உட்கட்சிச் சிக்கல்கள் எழுந்துள்ளன எனவும் அறியமுடிந்தது.

இதற்கிடையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தாமரை மொட்டுடன் கைகோர்க்குமானால் தாம் தனித்துத் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என குமார் வெல்கம எம்.பி. தெரிவித்துள்ளார். (ஐ)

## 28,000...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலுவூட்டல் அமைச்சு ஆரம்பித்துள்ளது. இதன் முதல் கட்டமாக 7 ஆயிரம் வீடுகளை அமைத்து பயனாளிகளுக்கு வழங்கத் திறைசேரி அனுமதியளித்துள்ளது.

12 லட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ள இந்தத் திட்டத்தில் மாதிரி வீடு பதுளையில் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வீட்டை யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பிரதேச செயலாளர்கள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

புதிய அரசு பதவிக்கு வந்த பின் அமைச்சரவையில் சமூக வலுவூட்டல் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கீழ் மீள்குடியேற்ற அமைச்சுக்குரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டன. அதனால் சமூக வலுவூட்டல் அமைச்சு, வடக்கு – கிழக்கில் 28 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 7 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான ஒப்புதலை திறைசேரி வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு முதல் கட்டமாக 3 ஆயிரம் வீடுகளைவழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கேட்டுக்கொண்டமைக்கு இணங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் பிரதேச செயலர்கள் ஊடாக இந்தத் திட்டத்துக்கு பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர். போரால் பாதிக்கப்பட்டு அண்மையில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு இந்தத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பொது நிதிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரனை நியமிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானம் எடுத்தது.

கோப் உள்ளிட்ட தெரிவுக் குழுக்களை நியமிப்பது தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தெரிவுக் குழு உறுப்பினர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவை சேனாதிராசா உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

அரச பொது நிதி தெரிவுக்குழுவின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது. குழுக்களின் உறுப்பினர்களை வரும் 5ஆம் திகதி நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

## யாழ். மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு நாள்களாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வந்த மாநகர சபையின் சுகாதார ஊழியர்கள் நேற்றைய தினம் தொடர்ச்சியான உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கடந்த புதன் ஆரம்பித்த பணிப் புறக்கணிப்பில் நேற்றைய தினம்வரை தமக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை என்று தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தேவை: மாற்று அணி மட்டுமல்ல மாற்று மார்க்கமும் கூட

நேற்று இப்பத்தியில் நாம் சுட்டிக்காட்டியபடி 1976இல் தனித் தமிழீழத்துக்கான வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எடுத்த தமிழினம், 1977 பொதுத் தேர்தலில் – அதனை ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தி – அந்தத் தீர்மானத்துக்கான ஆணையை வெளிப்படுத்தியது.

அந்த ஆணைக்குச் செயலுருக் கொடுப்பதற்கான போராட்டம் அஹிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் முன்னெடுக்கப்பட்டது.

2009 மேயில் தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் இலங்கைப் படைகளினாலும் அரசினாலும் ஆயுத முனையில் அடக்கி, ஒடுக்கப்பட்டபோது, தமிழர்களின் வட்டுக் கோட்டைத் தீர்மானமும் முடிவுக்கு வந்தாகப் பல தரப்புகளினாலும் கருதப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைத் தமிழர்கள் தம் கருத்துக் கணிப்பாகப் பிரயோகித்து வெளிப்படுத்த 1977 ஜுலைப் பொதுத் தேர்தலைப் பயன்படுத்தியபோது, அந்தத் தேர்தலில் ஒரு வேட்பாளராக நின்று, அந்தத் தனித் தமிழீழக் கோரிக்கையைப் பிரகடனப்படுத்தும் தானைத் தளபதிகளில் ஒருவராக விளங்கியவர் இரா.சம்பந்தன்.

அவரே 2009 முள்ளிவாய்க்கால் தோல்வியின் பின்னர் – இயலாமையின் உச்சத்தில் – நின்றபடி பிரிவினைக் கோரிக்கை கைவிடப்பட்டது என்ற நிலைப்பாட்டைச் சொல்லாமல் சொல்லி, செயலிலும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டால் வெளிப்புறமாக சுயநிர்ணய உரிமையைக் கோரும் உரித்து தமிழினத்துக்கு உள்ளது என்று அவ்வப்போது கூறியபடி –

ஒன்றுபட்ட, பிரிக்க முடியாத, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக் காணவே தமிழர்கள் விரும்புகின்றார்கள் என்பதை அடிக்கடியும், திரும்பத் திரும்பவும், விடாமலும் வலியுறுத்தியும் வருகின்றார்.

ஆயுதப் போராட்ட சாதனைகள் மூலம் நினைத்துப் பார்க்க முடியாத உச்சங்களைத் தொட்ட தமிழினம், 'ஐக்கிய இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு' கொழும்பு அரசை இணங்க வைக்கும் – அதுவும் சர்வதேச உறுதிப்பாட்டுடன் இணங்கி வரவைக்கும் – நிலையை ஏற்படுத்தியது என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆயுதப் போராட்ட முடிவில் – அதனைத் தொடரமுடியாத இயலாமையில் – தோல்விப் பின்னடைவில் – துவண்ட நிலையில், வட்டுக்கோட்டைத் தீர்மான முடிவைத் தமிழினம் கைவிட்டுவிட்டதாக அறிவிக்க வேண்டிய கட்டாயம் – இக்கட்டு – தமிழர்களின் இப்போதைய தலைமைக்கு ஏற்பட்டது என்பது கண்கூடு.

1970 – 1980 களிலும் பின்னர் 2009 வரையும் தமிழினத்துக்குத் தலைமை தாங்கிய தலைவர்கள், இலங்கையின் சட்ட வரையறை வரம்புகளையும் மீறி, இயற்கை நீதியின் அடிப்படையிலும், இயல்பாகவே இலங்கைத் தீவின் பாரம்பரிய குடிகளான தமிழினத்துக்கு இருக்கக் கூடிய வரலாற்று உரிமைகளின் அடிப்படையிலும் முடிவுகளை எடுத்து அவற்றுக்கு அமைவாக இனத்தை வழி நடத்த முயன்றார்கள். ஆனால் அதில் அவர்களால் இறுதி வெற்றியை ஈட்ட முடியவில்லை.

அதற்குப் பின்னர் – 2009 மேக்குப் பின்னர் – தமிழினத்துக்குத் தலைமை தாங்கும் பிரதான தலைவர்கள் இலங்கைச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நியாயத் தீர்வு ஒன்றைப் பெறலாம் என்ற அடிப்படையிலேயே முயன்று வருகிறார்கள்.

'ஒன்றுபட்ட, பிளவுபடாத, பிரிக்க முடியாத, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு' என்ற அவர்களின் அந்த வலியுறுத்தலின் பின்னால் புதைந்து கிடக்கும் உண்மை இதுதான்.

ஆயுத போராட்டத்தின் முடிவில், இயலாமையின் உச்சத்தில் இந்த முடிவுக்கு அவர்களும், அவர்களைப் பின்பற்றித் தமிழினமும் வரவேண்டிய சூழல் ஏற்பட்டது.

இப்போது, இலங்கையின் அரசமைப்பு மற்றும் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவும் தமிழர்களுக்கு நியாயத் தீர்வு ஒன்று கிட்டாது என்ற யதார்த்தத்தை தென்னிலங்கையில் விஸ்வரூபமாய்ப் பேரெழுச்சி பெற்றிருக்கும் பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்கு – பெரும்பான்மை வாதம் – எமக்கு உணர்த்தி நிற்கின்றது.

இந்த இயலாமையில் இருந்து அடுத்த கட்ட நகர்வு – தமிழர் தலைமையின் அடுத்த தடப் போக்கு – எத்திசையில் அமையப் போகின்றது?

வெறுமனே ஜனநாயக ரீதியிலான தலைவர்களிடம் மட்டும் முடிவெடுக்க விட்டு விட்டு தமிழினம் ஒதுங்கி நின்று பார்த்திருக்கும் நடவடிக்கை அல்ல இது.

புலத்திலும் களத்திலும் உள்ள தமிழர்கள் அனைவரும், அவர்கள் தம் அமைப்புக்கள் அனைத்தும் பங்குபற்றி – முழு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு – முடிவெடுக்க வேண்டிய விவகாரம் இது.

அடுத்த பொதுத் தேர்தலுடன் தென்னிலங்கையில் பௌத்த, சிங்க மேலாண்மைவாதம் பெரும்பான்மை என்ற வலிமையோடு வீறு கொண்டு முழு அதிகாரத்துடன் அவரும்போது, தமிழரின் செல்நெறி யாது என்று தீர்மானிக்க வேண்டிய ஒரு புதிய சூழல் எழுகின்றது.

இனியும் 'பிளவுபடாத, பிரிக்க முடியாத, ஒன்றுபட்ட, ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு' என்ற வாய்ப்பற்ற பேச்சால் பயன் ஏதும் கிடைக்குமா, அல்லது மாற்று வழி – மாற்று மார்க்கம் – குறித்து சிந்திப்பதா என்பதைத் தமிழினம் தீர்மானிக்க வேண்டிய காலகட்டம் வந்துள்ளது.

மாற்று அணி மட்டுமல்ல, மாற்று மார்க்கமும் சிந்திக்கப்பட – தேடப்பட – வேண்டிய தேவை எழுந்திருக்கின்றதாகவே நாம் கருதுகிறோம்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு மனு!

மன்னார், ஜன. 25

வடக்கு – கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மன்னாரில் நேற்று முன் தினம் காலை வடக்கு மாகாண காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து ஐ.நா. மனித



உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்தனர்.

அந்த மகஜரில், மேற்படி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்கள் கடந்த 10 ஆண்டுகளாக போராடியும் வருகின்றனர். காணாமல் ஆக்கப்பட்டமைக்குக் காரணமான இலங்கை அரசிடமிருந்து எமக்கு நீதி கிடைக்காது என்பதனை நன்குணர்ந்துள்ள நிலையில் நாம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஐ.நா. பாதுகாப்புச் சபை உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமிருந்தே நீதியை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

கடந்த 16 – 12 – 2019இல் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ள இலங்கை ஜனாதிபதி 'காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதுடன், குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்துச் சிந்திக்க முடியும்' என்றும் அவர்களைத் திரும்பக் கொண்டுவர முடியாது என்றும் கூறியுள்ளார். ஜனாதிபதியின் மேற்படி கருத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி கூறுவது போன்று எமது உறவுகள் காணாமல் போகவில்லை. மாறாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினராலும், அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவக் குழுவினராலும் கடத்தப்பட்டும், கைது செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்தத்தின் இறுதியில் இராணுவத்தினரிடம் உறவினர்களால் கையளிக்கப்பட்டும், உறவினர்கள் முன்னிலையில் சரணடைந்தவர்கள் பின்னர் காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள் மற்றும் இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இல்லை என்றால் இராணுவமும் அரசும் பொறுப்புக் கூறவேண்டும். குறிப்பாக இறுதி யுத்தத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் என்ற அடைப்படையில் தற்போதய ஜனாதிபதியும் பொறுப்புக் கூற வேண்டியவரே.

கடந்த நல்லாட்சி அரச காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் விருப்பங்கள் கேட்டறியப்படாமல் உள்ளக விசாரணைக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களது சம்மதம் இல்லாமல் 'காணாமல் போனவர்களுக்கான' அலுவலகம் திறக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகளானது மேற்படி காணாமல் ஆக்கப்பட்டமைக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை தற்போதைய ஆட்சியாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு உள்ளக விசாரணைக்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு கோரியவர்களும் காணாமல் போனோர் அலுவலகம் திறக்கப்படுவதனை நியாயப்படுத்தியவர்களும் எப்போதும் மறைமுகமாகத் தனக்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் இந்த ஆட்சியாளர்களுக்கு உண்டு.

எனவே அரசு தாம் செய்த குற்றங்களுக்கு தம்மைத் தாமே தண்டிக்கப் போவதில்லை. எனவே சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றின் மூலமாகவே எமக்கு நீதி கிடைக்கும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அந்த வகையில் தங்களிடம் கீழ்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

(1). பொறுப்புக்கூறல் தொடர்பாக இலங்கை அரசுக்கு வழங்கிய கால அவகாசத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2). இலங்கையில் இடம்பெற்ற இனவழிப்பு, யுத்தக் குற்றங்கள், மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை ஒன்றை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாக மேற்கொள்ள வேண்டுமென ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது ஐ.நா செயலாளர் நாயகத்துக்குப் பரிந்துரை செய்ய தாங்கள் வலியுறுத்த வேண்டும்.

(3). வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. குழு இலங்கையை முழுமையாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா. செயலாளர் நாயகத்திற்குப் பரிந்துரைக்க வேண்டும்.

(4). இலங்கைக்கான விசேட ஐ.நா. அறிக்கையாளரை நியமிக்க வேண்டும் என்ற பரிந்துரையையும், வடக்கு கிழக்கில் நிலைவரத்தைக் கண்காணிக்கவும் மேம்படுத்தவும், உறுதுணையாகவும் இருக்க ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் ஒன்றை வடக்கு கிழக்கில் நிறுவவேண்டும் எனவும் மீளவும் வலியுறுத்துகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி ஜேர்மன் தொழிநுட்பக் கல்லூரி நிர்வாகச் சிக்கலினால் மாணவர்கள் பாதிப்பு

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் இயங்கும் ஜேர்மன் தொழிநுட்பக் கல்லூரியில் நிர்வாகப் பிரச்சினைகள் இருந்து வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில், மீண்டும் மாணவர்களின் பரீட்சை விடயத்தில் நிர்வாகம் தவறிழைத்திருப்பதாக மாணவர்களால் குற்றச் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்தக் கல்லூரியில் கல்வி கற்று பல்வேறு மாவட்டங்களிலும் மாணவர்கள் 6 மாதகாலப் பயிற்சியைப் பெற்றுவரும் நிலையில் அவர்களுக்கான இறுதிப் பரீட்சை இன்று இடம்பெறும் என புதன்கிழமை பிற்பகல் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஜேர்மன் தொழிநுட்பக் கல்லூரியில் நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து வருவதாகவும் அந்தப் பிரச்சினையைக் கல்விகற்கும் மாணவர்களின் தலையில் பாரப்படுத்தி அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் இறுதிப் பரீட்சையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக மாணவர்கள் குற்றச்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு திடீரெனப் பரீட்சை என அறிவிக்கப்பட்டதால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் வெளிமாவட்டங்களில் பயிற்சி பெறும் மாணவர்கள் வருகைதந்து பரீட்சைக்கு தோற்றுவது கடினம் எனவும் மாணவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் இத்தகைய கல்லூரி இயங்கி மாணவர்கள் பயன்பெறவேண்டிய சூழல் உருவாக்கப்பட்டும் நிர்வாகம் சீரின்மையால் வடக்கு மாணவர்களின் கல்வி தொடர்ந்தும் கேள்விக்குறியாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நாளை 26.01.2020 – ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: அவிட்டம் முழுவதும்
திதி : துதியை பி.இ. 06.09 வரை

இராகுகாலம் : 05.06 – 06.36
சுப நேரம் : 09.36 – 11.06

# தமிழ் ஊடகவியலாளர்களுக்கு கிழக்கில் கொலை அச்சுறுத்தல்



மட்டக்களப்பு, ஜன.25

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் சிலருக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அவர்களது புகைப்படங்களுடன் துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அடையாளம் தெரியாதவர்களால் வெளியிடப்பட்ட இந்த துண்டுப் பிரசுரங்கள் மட்டக்களப்பு பஸ் நிலையத்துக்கு மேல் உள்ள மட்டக்களப்பு மாவட்ட ஊடக அமையத்தின் அலுவலகத்துக்குள் போடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட ஊடக அமையத்துக்குள் நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணி அளவில் ஊடக சந்திப்புக்காக ஊடகவியலாளர்கள் சென்றபோது அந்தத் துண்டுப் பிரசுரங்கள் போடப்பட்டிருந்தமையை அவர்கள் அவதானித்துள்ளனர்.

அந்தத் துண்டுப் பிரசுரத்தில், “எச்சரிக்கை! எச்சரிக்கை! இவர்கள்தான் வெளிநாட்டுப் புலிகளிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு அரசுக்கு எதிராக செயற்படும் ரிப்போட்டர்ஸ், இவர்களுக்கு விரைவில் மரண தண்டனை விதிப்போம்!” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் நினைவஞ்சலித் துண்டுப் பிரசுரத்தில் ஊடகவியலாளர்களின் படங்கள் வட்டமிட்டு அச்சிடப்பட்டுள்ளன.




# முல்லையில் சிறந்த விவசாயிகள் பண்ணையாளர்கள் கௌரவிப்பு









முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண விவசாயமும், கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வை முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாணப் பணிப்பாளர் பூபாலப்பிள்ளை உகநாதன் தலைமையேற்று நடத்தினார்.

இந்த நிகழ்வில் கடந்த 2019ஆம் ஆண்டில் மாவட்டம், பிரதேச செயலகங்கள் மற்றும் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய 246 விவசாயிகளும், 54பண்ணையாளர்களுமாக மொத்மாக 300பேர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ச.கனகரத்தினம், முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபைத் தவிசாளர் செ.பிரேம்காந், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் புனிதகுமார், யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.ஜெ.சின்னையா, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி.கௌரிதிலகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

# எழுதுமட்டுவாழ் கொலை; இருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 25

எழுதுமட்டுவாழ் பகுதியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கு, படித்த மகளிர் திட்டப் பகுதியிலுள்ள குறுக்கு வீதி அருகிலிருந்து புதன்கிழமை காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த 52 வயதான ஆணொருவரே கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் எழுதுமட்டுவாழ் வடக்கு, படித்த மகளிர் திட்டத்தில் வசித்து வரும் 36 வயதான பெண் ஒருவரும் வேறு பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமையையடுத்து எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சட்டத்துறைப் பட்டப்படிப்பு கற்கை விண்ணப்பங்கள் மார்ச் முதல் ஏற்பு

கொழும்பு, ஜன. 25

இடைநிறுத்தப்பட்டுள்ள திறந்த பல்கலைக்கழக சட்டத்துறை பட்டப்படிப்பு மாணவர்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணி மார்ச் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது என்று அறவிக்கப்பட்டுள்ளது.

தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம், உயர்கல்வி, தொழிநுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க உள்ளிட்ட விரிவுரையாளர்களுடன் நேற்றுமுன்தினம் பல்கலைக்கழகத்தில் இது தொடர்பாக அமைச்சர் பந்துல குணவர்த்தன பேச்சு நடத்தினார்.

மென்பொருள் கட்டமைப்பை அறிமுகப்படுத்தி, பல்கலைக்கழக வாய்ப்பைப் பெறாத 40 ஆயிரம் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

காலைக்கதிர் Kalaikathir


# நிர்பயா கொலை குற்றவாளிகள் நால்வருக்கும் சனியன்று தூக்கு!



புதுடெல்லி,ஜன.25

பெப்ரவரி முதலாம் திகதி (எதிர்வரும் சனிக்கிழமையன்று) தூக்கில் போடப்பட இருக்கும் நிர்பயா கொலை குற்றவாளிகள் 4 பேரிடமும், அவர்களுடைய கடைசி ஆசை என்ன என்று திகார் சிறை அதிகாரிகள் கேட்டு உள்ளனர். ஆனால் அவர்கள் இதுவரை பதில் அளிக்கவில்லை.

டெல்லியில் கடந்த 2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி ஓடும் பஸ்ஸில் நிர்பயா என்ற மருத்துவ மாணவி கற்பழித்து கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த வழக்கில் ராம்சிங், முகேஷ் குமார் சிங் (வயது 32), பவன் குப்தா (25), வினய் சர்மா (26), அக்ஷய் குமார் சிங் (31) மற்றும் ஒரு சிறுவன் ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ராம்சிங் டெல்லி திகார் சிறையில் தற்கொலை செய்து கொண்டார். மற்றொருவர் சிறுவர் என்பதால், இளஞ்சிறார் சட்டத்தின் கீழ் அவருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. முகேஷ் குமார் சிங், பவன் குப்தா, வினய் சர்மா, அக்ஷய் குமார் சிங் ஆகிய 4 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு கடந்த மாதம் 22 ஆம் திகதி தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட இருந்தது. இந்த நிலையில், தூக்கு தண்டனையில் இருந்து தப்பிக்கும் கடைசி முயற்சியாக 4 பேரில் ஒருவரான முகேஷ் குமார் சிங் ஜனாதிபதிக்குக் கருணை மனு அனுப்பினார். மற்ற 3 பேரும் கருணை மனு தாக்கல் செய்யவில்லை.

மேலும் குற்றவாளிகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதனால் தண்டனையை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.

முகேஷ் குமார் சிங்கின் கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்தமையைத் தொடர்ந்தும், சீராய்வு மனுக்களை உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்ததாலும் 4 பேருக்கும் சிறையில் வருகிற முதலாம் திகதி காலை 6 மணிக்கு மரண தண்டனையை நிறைவேற்ற டெல்லி கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி சதீஷ்குமார் அரோரோ உத்தரவிட்டார்.

பொதுவாகத் தூக்கு தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கும் குற்றவாளிகளிடம், அவர்களுடைய கடைசி ஆசை என்ன என்று கேட்கப்படுவது வழக்கம். அதன்படி இந்த 4 பேரிடமும், அவர்களுடைய கடைசி ஆசை என்ன என்பதை சிறை அதிகாரிகள் கேட்டு உள்ளனர்.

ஆனால் இதுவரை அந்த 4 பேரும் தங்கள் கடைசி ஆசை பற்றிய விவரங்களைத் தெரிவிக்காமல் மௌனமாக இருந்து வருகிறார்கள்.

இதுபற்றி பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், "தூக்கிலிடப்படுவதற்கு முன்பு அவர்களுடைய கடைசி ஆசை என்ன என்பதை எழுத்துபூர்வமாக பட்டியலிடுமாறு கேட்டு இருக்கிறோம். மேலும் உறவினர்களில் யாரையாவது சந்திக்க விரும்புகிறீர்களா, உங்களது உடைமைகளை யாரிடம் ஒப்படைக்க விரும்புகிறீர்கள் என்பது பற்றியும் கேட்டு இருக்கிறோம். ஆனால் அவர்களில் யாரும் இதுவரை பதில் அளிக்கவில்லை. அவர்களுடைய பதிலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்"– என்றார்.

மேலும், கடைசி ஆசை என்ன என்பதை அவர்கள் தெரிவிக்கும்பட்சத்தில், அதை நிறைவேற்ற முடிந்தால் அதுபற்றி சிறை அதிகாரிகள் முடிவு செய்வார்கள் என்றும் அவர் கூறினார்.

குற்றவாளிகள் 4 பேரையும் திகார் 3 ஆவது எண் சிறையில் தூக்கில் போடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. 4 பேரின் எடைக்கு தகுந்தவாறு மணல் மூட்டைகளை தூக்கில் தொங்கவிட்டு கடந்த வாரம் ஒத்திகை பார்க்கப்பட்டது.

4 பேரும் ஒரே நேரத்தில் தூக்கில் போடப்படுவார்கள் என்று தெரிகிறது. அவர்களை தூக்கில் போடுவதற்காக மீரட் சிறையில் இருந்து பவன் ஜல்லாத் என்ற ஊழியர் வர இருக்கின்றமையை உத்தரபிரதேச மாநில அதிகாரிகள் உறுதிசெய்து உள்ளனர்.

# பாக்.அணு ஏவுகணை சோதனை வெற்றி!



இஸ்லாமாபாத்,ஜன.25

பாகிஸ்தான் நடத்திய அணு ஏவுகணைச் சோதனை வெற்றி அடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான், தரையில் இருந்து புறப்பட்டு சென்று தரையில் உள்ள இலக்குகளை தாக்கும் ஆற்றல் வாய்ந்த காஸ்னவி அணு ஏவுகணைச் சோதனையை கடந்த ஓகஸ்டு 29 ஆம் திகதி நடத்தியது. நேற்று மீண்டும் காஸ்னவி ஏவுகணையை அந்த நாடு சோதித்து பார்த்தது. இந்தச் சோதனை வெற்றி அடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்த ஏவுகணை அணுகுண்டுகளுடன், 290 கி.மீ. தொலைவு வரையில் சென்று இலக்குகளைத் தாக்கக் கூடியதாகும்.

இதையொட்டி பாகிஸ்தான் இராணுவச் செய்தி நிறுவனம் ஐ.எஸ்.பி.ஆர். விடுத்துள்ள அறிக்கையில், இந்த ஏவுகணை சோதனை பகல் மற்றும் இரவு நேரங்களில் செயல்பாட்டு தயார் நிலை நடைமுறைகளை ஒத்திகை பார்ப்பதை நோக்கமாக கொண்டு, படைகளின் கள பயிற்சியின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது என கூறப்பட்டுள்ளது.

இந்தச் சோதனையை இராணுவ உயர் அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர்.

காஸ்னவி அணு ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தி இருப்பதை அந்த நாட்டின் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி, பிரதமர் இம்ரான்கான், முப்படைதளபதிகள் பாராட்டி உள்ளனர்.

# இந்திய வடமாநிலங்களில் தொடர்ந்தும் மழை மற்றும் பனிப்பொழிவு நீடிக்குமாம்!

மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள பருவ நிலை மாற்றத்தால், ஜம்மு காஷ்மீர், டெல்லி உள்ளிட்ட இடங்களில் குளிரும் மழையும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைநகர் டெல்லியில் ஏழு டிகிரி செல்சியஸுக்கு வெப்ப நிலை காணப்படுகிறது. இதனால் மக்கள் குளிருக்கு ஒடுங்கியுள்ளனர். குளிர்காற்று மணிக்கு 35 கிலோமீற்றர் வேகத்தில் வீசியதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீரில் பனிப்பொழிவும் அதிகமாக காணப்படுகிறது. இமாச்சலப் பிரதேசத்தின் லாஹூல்ஸ்பிட்டி மலைப் பகுதியில் பனி கொட்டிக் கிடக்கிறது. பல்வேறு சாலைகளை, உறைபனி சூழ்ந்திருப்பதால் அதை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை பொதுப் பணித்துறை அதிகாரிகள் மேற்கொண்டிருக்கின்றனர்.



# காஷ்மீர் விவகாரத்தில் வெளிநாட்டுத் தலையீடு தேவையில்லை என ட்ரம்பிற்கு இந்தியா பதிலடி




காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு, உதவி செய்யத் தயாராக இருப்பதாகக் கூறிய அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கோரிக்கையை இந்தியா மீண்டும் நிராகரித்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் இடையேயான காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காண மத்தியஸ்தம் செய்ய அமெரிக்கா தயாராக இருப்பதாக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்நிலையில், 'காஷ்மீர் விவகாரம் இருதரப்பு விவகாரம். இதில் மூன்றாவது நாட்டின் தலையீடு இருப்பதை இந்தியா விரும்பவில்லை', என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. காஷ்மீர் விவகாரத்தில் ட்ரம்பின் விருப்பம் நான்காவது முறையாக மறுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சவுதியில் இந்தியத் தாதிக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு

சவுதி அரேபியாவிற்கு பணிக்குச் சென்ற கேரள மாநிலத்தை சேர்ந்த செவிலியர் (தாதி) ஒருவருக்கு கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

அந்நாட்டின் அபாவில் உள்ள அல் ஹயத் மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர்கள் 30பேருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது.

இதில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளித்த போது, அந்த செவிலியருக்கு நோய் தொற்று ஏற்பட்டது தெரியவந்துள்ளது.

இதையடுத்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 100 செவிலியர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் பாதிக்கப்பட்டுள்ள கேரள செவிலியருக்கு உரிய சிகிச்சை அளித்து, காக்க நடவடிக்கை எடுக்குமாறு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் கடிதம் எழுதி உள்ளார்.

# 13 ஆயிரம் விமானப் பயணிகளிடம் இந்தியாவில் வைரஸ் பரிசோதனை



கொரோனா வைரஸ் பரவும் சீனாவில் இருந்து இந்தியாவுக்கு இதுவரை 60 விமானங்களில் வந்த சுமார் 13 ஆயிரம் பயணிகளிடம் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் யாருக்கும் பாதிப்பு இல்லை என தெரியவந்துள்ளது.

சீனாவில் கொரோனா வைரசால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதையடுத்து சீனாவின் எந்த விமான நிலையத்தில் இருந்தும் இந்தியாவுக்கு வரும் அனைத்து பயணிகளுக்கும் விமான நிலையத்திலேயே மருத்துவ பரிசோதனை செய்ய மத்திய சுகாதார அமைச்சகம் உத்தரவிட்டது.

பெங்களூரு, ஐதராபாத், கொச்சின் உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு கடந்த 22 ஆம் தேதி வரை 60 விமானங்களில் வந்த 12 ஆயிரத்து 828 பயணிகளுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் எவருக்கும் பாதிப்பு இல்லை என தெரியவந்துள்ளதாக மத்திய சுகாதாரத் துறை செயலாளர் பிரீத்தி சுதன் தெரிவித்தார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலில் சிரியாவில் 40 படையினர் பலி

டமாஸ்கஸ்,ஜன.25

சிரியாவில் இராணுவ முகாம்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குத



லில் 40 வீரர்கள் பலியாகினர்.

சிரியாவின் இத்லீப் மாகாணம் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. அவர்களிடம் இருந்து மாகாணத்தை மீட்க ரஷ்யப் படையின் உதவியுடன் சிரிய இராணுவம் கடுமையாகப் போராடி வருகிறது. இதேசமயம் அந்த மாகாணத்தில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் காலூன்றி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த நிலையில் இத்லீப் மாகாணத்தின் சமாகா மற்றும் ஹவாய்ன் நகரங்களில் உள்ள இரு இராணுவ முகாம்களைக் குறிவைத்துத் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். நானூறுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் துப்பாக்கிகளால் சுட்டும், குண்டுகளை வீசியும் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 40 இராணுவ வீரர்கள் பலியாகினர். 80 பேர் படுகாயம் அடைந்தனர்.

அதே சமயம் இராணுவ வீரர்கள் நடத்திய பதில் தாக்குதலில் 50 தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது. மேலும் 90 தீவிரவாதிகள் பலத்த காயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

# விமான நிலையத்தின் எல்லை சுவர் மீது விமானம் மோதி தீப்பிடித்தில் 4 பேர் பலி

## அமெ. லொஸ் ஏஞ்சல்ஸில் சம்பவம்



வொஷிங்டன்,ஜன.25

அமெரிக்காவில் சிறிய ரக விமானம் சுவரில் மோதி தீப்பிடித்து எரிந்ததில் 4 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கோரோனா விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் மாலை சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டது. விமானத்தில் விமானி உள்பட 4 பேர் இருந்தனர்.

விமானம் ஓடுபாதையில் இருந்து மேல் நோக்கிப் பறக்க தொடங்கிய சில நொடிகளில் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் விமான நிலையத்தின் எல்லை சுவர் மீது விமானம் மோதி தீப்பிடித்தது.

பின்னர் தரையில் விழுந்த விமானம் முற்றிலுமாக எரிந்து உருகுலைந்து போனது. இந்தக் கோர விபத்தில் விமானத்தில் இருந்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறது.

# தீயணைப்பு விமானம் விழுந்து நொறுங்கியது ஆஸியில் மூன்று அமெரிக்கர்கள் உயிரிழப்பு

சிட்னி,ஜன.25

ஆஸ்திரேலியாவில் தீயணைப்பு விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் அமெரிக்கர்கள் 3 பேர் பலியாகினர்.

ஆஸ்திரேலியாவின் தென்கிழக்கு மாகாணங்களில் கடந்த 4 மாதங்களாகக் காட்டுத்தீ எரிந்து வருகிறது. இந்த காட்டுத்தீயில் பல லட்சம் ஏக்கர் அளவிலான நிலப்பரப்பு எரிந்து நாசமானமையோடு, ஆயிரக்கணக்கான வீடுகளும் தீயில் சாம்பராகின. லட்சக்கணக்கான வன விலங்குகளும் செத்து மடிந்தன.

தற்போதும் அங்கு 80 க்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத்தீ எரிந்து வருகிறது. இந்தத் தீயை அணைப்பதற்கு அனைத்து வழிகளிலும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் காட்டுத்தீ எரிந்து வரும் இடங்க




ளில் தண்ணீர் தெளிப்பதற்காக 'ஹெர்குலஸ் சி 130' ரக சரக்கு விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. இந்த விமானத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த தன்னார்வ தீயணைப்பு வீரர்கள் 3 பேர் இருந்தனர்.

விமானம் புறப்பட்டு சென்ற சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. அதனைத் தொடர்ந்து, மாயமான விமானத்தைத் தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டன. இதில் அங்குள்ள ஒரு மலைப் பாங்கான பகுதியில் விமானம் விழுந்து நொறுங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதில் அமெரிக்க வீரர்கள் 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். அவர்களது உடல்கள் மீட்கப்பட்டன. விமானம் விபத்தில் சிக்கியது எப்படி என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து தீவிர விசாரணை நடத்த நியூ சவுத் வேல்ஸ் மாகாண தலைவர் கிளாடிஸ் பெரெஜிக்லியன் உத்தரவிட்டுள்ளார்.

# ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான இனவழிப்பை மியான்மர் நிறுத்த வேண்டும்

## சர்வதேச நீதிமன்றம் வியாழனன்று உத்தரவு



தி ஹேக்,ஜன.25

மியான்மரில் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெதர்லாந்தின் தி ஹேக் நகரிலுள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகள் வியாழக்கிழமை பிறப்பித்த உத்தரவில், ரோஹிங்கயாக்களுக்கு எதிரான இன அழிப்பை தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அந்த நாட்டு அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும், இதுதொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உண்மையிலேயே ரோஹிங்கயா இனத்தவரைப் பாதுகாப்பதற்கானவை என்பதை மியான்மர் உறுதி செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளனர்.

# கொரோனா வைரஸ் தொற்று பாம்புகளை வேகவைக்காமல் சாப்பிட்டதால் ஆரம்பித்ததா?

சீனாவில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் பாம்புகளிடம் இருந்து பரவியிருக்கலாம் என்ற தகவல் வெளியாகி உள்ள நிலையில் இந்த வைரஸுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

சீனாவின் ஊகான் நகரில் காய்ச்சலால் பரவிய கொரோனா வைரஸுக்கு நேற்று முன்தினம் காலை வரை 17 பேர் உயிரிழந்த நிலையில் நேற்ற. முன்தினம் மாலையில் முதியவர் ஒருவர் பலியானமையைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 630ஐத் தாண்டியுள்ளது. இந்த நிலையில் இன்று சீனாவில் புத்தாண்டு பிறப்பதை முன்னிட்டு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கானோர் அங்கு வருவது வழக்கம். இதனால் கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது. இதனிடையே 11 மில்லியன் மக்கள் தொகை கொண்ட வுகான் நகரம் முற்றிலும் முடக்கப்பட்டது.

அங்கிருந்து யாரும் மற்ற நகரங்களுக்கோ, மற்ற நகரத்தில் இருந்து வுகானுக்கோ செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வுகானைத் தொடர்ந்து 7 மில்லியன் மக்கள் வசிக்கும் ஹுவாங்காங் நகரமும் முடக்கப்படுகிறது. அங்கும் போக்குவரத்து முற்றிலும் நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார வரலாற்றில் 11 மில்லியன் மக்களை வைத்துப் பூட்டுவது என்பது சரித்திரத்தில் முன்னெப்போதும் நடந்திராத ஒன்று என உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வைரஸ் காரணமாக சீனாவில் பொது சுகாதார அவசர நிலை இருப்பதாகவும், அது உலகளாவிய நிலையில் இல்லை என்றும் உலக சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் சீனர்களின் உணவுப் பட்டியலில் முக்கிய இடம் பிடித்துள்ள பாம்புகளிடம் இருந்து கொரோனா வைரஸ் பரவியிருக்கலாம் என்ற கருத்து பரவலாக எழுந்துள்ளது. தைவானை பூர்வீகமாகக் கொண்ட பட்டை கட்டு விரியன் பாம்புகளும், சீன நாகங்களும் அவர்களுக்கு பிடித்த மெனுவில் முக்கிய இடத்தில் உள்ளன.

தெற்கு மற்றும் மேற்கு சீனாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் காணப்படும் இந்த வகை பாம்புகளிடம் குளிர்காலத்தில் கொரானா வைரஸ் இருந்தது தெரிய வந்துள்ளது. இந்நிலையில் பட்டை கட்டு விரியன் பாம்புகளை வேகவைக்காமல் சாப்பிட்டிருந்தால் அதன் உடலிலிருந்து கொரோனா வைரஸ் பரவியிருக்கலாம் என்ற கருத்து எழுந்துள்ளது. இந்த நிலையில் கொரோனா



வைரஸ் பரிசோதனைக்காக வுகான் நகர மருத்துவமனைகளில் நூற்றுக்கணக்கானோர் பரிசோதனைக்கு குவிந்து வருகின்றனர்.

இதேபோல் வுகான் நகரம் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதால் அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக இதுநாள் வரை உயிரினங்களை ரசித்து ருசித்த சீனர்களின் பார்வை தற்போது காய்கறிகளுக்கு மாறியுள்ளது. இதனால் காய்கறி விற்பனை நிலையங்களில் குடுமிப்பிடி சண்டை போட்டு அதனை வாங்கிச் செல்கின்றனர்.

காலைக்கதிர்
Kalaikathir





# ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் மையம் கொண்டுள்ள

# சீன– இந்திய பனிப்போர்

கடந்த சில தினங்களுக்குள் இலங்கை அரசியலில் மூவர் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கடந்தவாரம் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சென்னைக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது அங்கு அவர் தெரிவித்திருந்த கருத்துக்களும், அதற்கு எதிர்வினை ஆற்றும் வகையில் இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்துக்களும் இவை.

இரண்டுக்கும் மத்தியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சீன வெளிவிவகார அமைச்சர் வாங்ஜி தெரிவித்துள்ள கருத்துக்களும் இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கை தெளிவுற எடுத்துக்காட்ட வல்லவையாகக் காணப்படுகின்றன.

"இலங்கையில் எந்த அளவுக்கு தமிழ் மக்கள் ஒடுக்கப் படுகின்றார்களோ, எந்த அளவுக்கு அவர்களின் பூர்வீக வடக்கு – கிழக்கு தாயகம் ஆக்கிரமிக்கப்படுகின்றதோ அந்த அளவுக்கு அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்பதை மறந்து விடாதீர்கள்.

"அதாவது இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையில் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது. இதனை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். எமது நாட்டின் (இலங்கையின்) சிங்களத் தலைவர்களுக்கு இந்தியாவின் மீது பற்றோ பரிவோ இல்லை."

– இவ்வாறு கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை சென்னையில் ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றுகையில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இச்செய்தி இந்திய – இலங்கை ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது.

இதன்பின்பு செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:–

"வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு – தமிழர் பிரச்சினைக்கு – தீர்வை இந்தியா தரவேண்டும் என்பது போன்ற செய்திகளை ஊடகங்களில் பார்த்தேன். அதில் எனக்கு உடன்பாடில்லை. தீர்வு எம்மிடமே உள்ளது. அதைவிடுத்து தீர்வை வெளியில் தேடுவதில் அர்த்தம் இல்லை. நாம் எமது பிரச்சினைகளை ஒன்றுபட்டுத் தீர்க்க வேண்டும். என்று அவர் குறிப்பிட்டார்.



இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பா.ஜ.க. பொதுச் செயலாளர் ராம் மாதவ் நேரில் சந்தித்து வழ்த்துத் தெரிவித்த போது....

அதேவேளை அன்றைய தினம் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து உரையாடிய சீன வெளிவிவகார அமைச்சர் வாங்ஜி தெரிவித்த கருத்தும் இங்கே கவனத்துக்குரியது.

இலங்கையின் இறையாண்மையை சீனா எப்போதும் மதிக்கின்றது. அதன் உள்நாட்டு விவகாரங்களில் எந்த ஒரு வெளியாரின் தலையீட்டையும் அது ஒரு போதும் அனுமதிக்காது. ("China would always respect Sri Lanka's sovereignty and not allow any 'outside interference' in its internal affairs".)

அதேவேளை சீன வெளிவிவகார அமைச்சர் வாங்ஜி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ள இருந்த தருணத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக பா.ஜ.கவின் தேசிய செயலாளர் ராம் மாதவ் திடீரென ஞாயிற்றுக்கிழமை கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து இரகசியமாக உரையாடினார் என ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

எப்படியோ சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பனிப்போர் தற்போது ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் மையம் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

தனது உலகளாவிய ஆதிக்கத்திற்கான 'ஒரு தடம் ஒரு வீதி' ( One belt one road) என்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கான அச்சாணியாக இலங்கையை ஆக்கிக்கொள்ளப் பெரும்பாடுபட்டு சீனா விடாக்கண்டன் கொடாக்கண்டன் நிலைப்பாட்டில் நின்று செயற்படும் நிலை காணப்படுகின்றது.

ஆசியாவில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பெரும் வல்லரசாய் விளங்கவல்ல சீன ட்ரகன் தனது முற்றமும் வாசல்படியு மாய் விளங்கும் இலங்கையில் காலடி பதிப்பதை இந்தியா அச்சத்துடனும் வெறுப்புடனுமே பார்க்கின்றது.

சீனா இவ்வாறு உலகளாவிய ஏகாதிபத்தியப் பெருவல்லரசாக வளர்வது என்பது இந்தியாவிற்கு மட்டுமல்ல, அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளுக்கும் கூடவே ஜப்பானுக்கும் அது பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இப்பின்னணியில் சீனா – இந்தியா – அமெரிக்கா தலைமையிலான நாடுகளைக் கொண்ட ஒரு முக்கோண முரண்பாடும் போட்டியும் உலகலாவிய அரசியலில் எழுந்துள்ள காலமாய் இது காணப்படுகின்றது.

இத்தகைய முப்பெரும் தரப்புக்களுக்கு இடையே ஏற்படக்கூடிய 'கூடலிலும், மோத லிலும்' திருவிழாப் பார்க்கப்போன தவளையின் கதையாய் இலங்கைத்தீவின் பரி தாப நிலை காணப்படுகின்றது.

உள்நாட்டில் தனது சொந்த மக்களென அவர்களே கூறிக்கொள்ளும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்காகவும், அழிப்பதாகவும், கபளீகரம் செய்வதற்காகவும் அந்நிய அரசர்களை நாடி, அத்தகைய அந்நிய அரசுகளின் ஆபத்தான கனரக ஆயுதங்கள் கொண்டு ஈழத்தமிழர்களை அழிக்கும் கைங்கரியத்தைச் செய்து வரும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு தாமே உள் நாட்டில் தீர்வு கொடுக்கப் போகின்றார்கள் என விசித்திரமாய்ப் பேசுகின்றனர்.

அவர்கள் சொந்த மக்களெனக் கூறும் அந்த சொந்த மக்களுக்குரிய உரிமைகளை வழங்கி அவர்களுடன் இணைந்து அமைதியும், சமாதான மும், சுபீட்சமும் நிறைந்த இலங்கையைக் கட்டியெ ழுப்புவதற்கு மாறாக அந்நிய அரசுகளின் அரசியல் , இராணுவ, ஆயுத, இராஜதந்திர உதவிகளைப் பெற்று தம் சொந்த தமிழ் மக்களை அழித்த வரும் செயலை செய்துகொண்டு அவர்களுக்கான தீர் வைப் பெற வெளிநாடுகளின் உதவிகளை அவர்கள் கோரக்கூடாது என்று இப்போது வேதம் ஓதுகிறார்கள்.

இனப்பிரச்சினை என்பது ஒருபோதும் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. அது எப்போதும் சர்வதேசப் பிரச்சினை.

இன அழிப்பை மேற்கொள்வதற்கும் அதனை நியாயப்படுத்துவதற்குமாக அப்பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்றும், அத்தகைய நாட்டின் உள்விவகாரங்களிலும் இறைமையிலும் தலையிடக்கூடாது என்று கூறிக்கொண்டு அந்நிய நாடுகளின் உதவிகளைப் பெற்று அந்தத் தமிழ் மக்களை அழிக்கும் பணியை இலங்கை அரசு செய்து வருகிறது.

சீனாவின் 'பட்டுப் பாதைக்கு' இலங்கை அரசு அச்சாணியாய் இருப்பதன் பின்னணியில் தமிழினத்தை அழித்தொழிக்கும் இலங்கை அரசின் செயலை நியாயப்படுத்துவதற்காக ஈழத் தமிழர்களின் தேசிய பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அதனை இலங்கை அரசே பர்த்துக்கொள்ளும் என்றும் சீனா உறுதிபடக்கூறி அதற்கான அனைத்துவகை ஆக்கமும், ஊக்கமும், உதவியும், ஒத்தாசையும் சீனா புரிந்து வருகின்றது.

ஈழத் தமிழர்கள் இந்தியாவைத் தாமாக முதலில் நாடவில்லை. ஈழத்தமிழர்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றுபட்டு சிங்கள மக்களுடன் இணைந்து வாழவே உண்மையில் விரும்பினார்கள். அதற்கான முயற்சிகளை தான் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து அவர்கள் 20 நூற்றாண்டின் நடுப்பகுதிவரை எடுத்தாளர்கள்.

தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்கின்ற பிரே ரணயை 1955 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் டாக்டர் என். எம். பெரேரா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்காக வாதிட்டார்.

அதற்குமறுப்புதெரிவித்து உரையாற்றிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா இந்தியா பற்றிய அச்சத்தை எழுப்பி, இந்தியாவில் தமிழர்கள் வாழ்கின்றமையைக் காரணம் காட்டி அத்தகைய பின்னணியில் தமிழையும் உத்தியோகமொழியாக ஆக்கமுடியாது என்று கூறினார்.

(13ஆம் பக்கம் பார்க்க)

> இப்பின்னணியில் சீனா – இந்தியா – அமெரிக்கா தலைமையிலான நாடுகளைக் கொண்ட ஒரு முக்கோண முரண்பாடும் போட்டியும் உலகலாவிய அரசியலில் எழுந்துள்ள காலமாய் இது காணப்படுகின்றது. இத்தகைய முப்பெரும் தரப்புக்களுக்கு இடையே ஏற்படக்கூடிய 'கூடலிலும், மோதலிலும்' திருவிழாப் பார்க்கப் போன தவளையின் கதையாய் இலங்கைத்தீவின் பரிதாபநிலை காணப்படுகின்றது.

# எமக்கு சொன்ன எதையுமே கடந்த அரசு செய்யவில்லை

## சரவணபவன் எம்.பி. குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 25

மத்தியில் ஆட்சிக்கு வரும் அரசு தமிழ் மக்களது விடயத்தில் சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாகவே இருக்கின்றதாகச் சாடியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், அதுவே கடந்த அரசின் கல்முனை விவகாரத்திலும் மீனவர் விவகாரத்திலும் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் நாம் பேசுகின்றபோது அதற்குச் சாதகமாகப் பதிலளிக்கும் அரசு, அதனை நடைமுறைப்படுத்தும்போது பின்வாங்கும் நிலைமைகளே கடந்த அரசில் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாணக் கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான வட்ட மேசைக் கலந்துரையாடலொன்று யாழ். ரில்கோ ஹோட்டலில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினைகளால் வாழ்வாதார ரீதியாகவும் பல பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்திலும் நான் பேசியிருக்கின்றேன். இதற்கு மேலாகச் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடனுடம் பேசி மீனவர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாகப் பல கடிதங்களையும் கொடுத்துள்ளேன்.

கடற்தொழில் சம்பந்தமாக இன்று இந்த நாட்டில் இருக்கும் சட்டங்கள்கூட உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதனால் தான் பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. குறிப்பாக பாதிப்பு என்கின்றபோது வெளிமாவட்டங்களிலில் இருந்த வரும் மீனவர்களால்தான் அதிகளவிலான பாதிப்பை எதிர்நோக்குகின்றனர்.

இந்தப்பாதிப்புக்கள் ஏற்படாதவகையில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும்



தொழில் நடவடிக்கைகளை நிறுத்துமாறு பல தடவைகள் அமைச்சரிடமும் அரசிடமும் கேட்கப்பட்டிருந்தது. ஆனால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமலேயே இருக்கின்றன.

ஆகவே ஒரு விடயத்தை அனைவரும் தெரிந்துவைத்திருக்கவேண்டும். அதாவது மீனவர் பிரச்சினை உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாங்கள் அரசுடன் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசுகின்றபோது சாதகமான பதில்களையே வழங்குவார்கள். ஆனால் அதனை நடைமுறைப்படுத்தும் நேரத்தில் எங்களது கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

அவ்வாறு எங்கள் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவது அல்லது நடைமுறைப்படுத்துவது என்பது மிக மிகக் குறைவாகவே இருக்கின்றது. இதில் குறிப்பாக கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தைக் குறிப்பிடலாம். அதாவது அரசுக்கு எதிரான பிரேரணையொன்று வந்தபோது நாங்கள் வாக்களிக்கப் போகாமல் இருந்தோம். ஆனால் உடனடியாகச் செய்து தருவதாகச் சொல்லப்பட்டு பல கடிதங்கள் பரிமாறப்பட்டு கோரிக்கை நிறைவேற்றப்பட்டதாகச் சொன்னார்கள்.

ஆனால் அதன் பின் ஏதுமே நடக்கவில்லை. இன்று வரை நடக்காத நிலையே தொடர்கிறது. இப்படி தான் நாங்கள் என்ன கேட்டாலும் அவர்கள் செய்வதாகச் சொல்வார்கள். ஆனால் அதனை ஒப்பேற்றிக் கொடுக்கமாட்டார்கள். அதிலிருந்து பின்வாங்கிவிடுவார்கள். இது தான் தமிழ் மக்களின் பல விடயங்களிலும் நடக்கின்றது. இவ்வாறான நிலையில்தான் புதிய தொரு அரசும் வந்திருக்கிறது. அவர்களும் இவ்றையெல்லாம் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது – என்றார். (ஐ –07)

# தெற்கு மீனவர் ஊடுருவலை தடுக்க அணி திரளவேண்டும்

## சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 25

தெற்கு மீனவர்கள் ஊடுவலைத் தடுக்க வடக்கில் ஒட்டுமொத்த மீனவர்களும் ஒன்றுபடவேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாண கடற்தொழிலாளர் இணையத்தின் தலைவர் சுப்பிரமணியம் தலைமையில் வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத் தொழில் தொடர்பான வட்ட மேசைக் கலந்துரையாடலொன்று யாழ். ரில்கோ ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலையே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்திய இழுவைப்படகுகளின் நடவடிக்கைகள், தென்னிலங்கையில் இருந்து இங்கு வரக் கூடிய மீனவர்களின் நடவடிக்கைகள் இந்த இரண்டு தரப்பினர்களும் செய்யக் கூடிய சட்டவிரோத மீன்படி முறைகள் மற்றும் உள்ளூர் மீனவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகள் இவை அனைத்தாலும் மீனவர்களின் அன்றாடத் தொழில் பாதிக்கப்படுகின்றது.

இதனால் எமது கடற்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதையே இங்கு பலரும் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். 1983 களில் இலங்கையின் 40 வீதமான மீன்பிடிகளை வடக்கு மாமாகணம் அனுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பிற்பாடு அந்த நிலைக்கு இன்னும் வளரவில்லை.

இங்கு முக்கியமாக நாங்கள் பார்க்கவேண்டிய விடயமென்னவெனில் முல்லைத்தீவில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள்தான். அவர்கள் பருவ காலம் என்று சொல்லிக் கொண்டு நிரந்தரமாக வந்து தங்கி இருக்கின்ற விடயம் மீனவர்கள் மத்தியில் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

இது பற்றி நாங்கள் நாடாளுமன்றத்திலோ அல்லது பொது வெளியிலோ பேச வெளிக்கிடுகின்றபோது அரசால் அல்லது சிங்கள அமைச்சர்களால் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களால் இதில் இனவாதக் கண்கொண்டு தமிழர்கள் நடக்கின்றார்கள் என்றதொரு கருத்து பரப்பப்படுகின்றது.

இந்தியாவில் கூட நாங்கள் பார்த்தோமேயானால் தமிழ் நாட்டுக் கடலில் தமிழர்கள் தான் மீன்பிடிக்கின்றார்கள்.



அவர்கள் ஆந்திரக் கடலுக்குப் போனால் அவர்கள் எச்சரிக்கப்படுகிறார்கள். அல்லது கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் வடக்கு மாகாணக் கடலுக்குள் தென்னிலங்கை மீனவர்கள் வந்து சர்வசாதாரணமாக மீன்பிடிக்கின்ற சூழ்நிலையும் அல்லது கரைவலை இழுக்கக் கூடிய இடங்களைப் பலாத்காரமாக கைப்பற்றுகின்ற நிலைமையும் அதற்கு மேலதிகமாக சகல விதமான சட்டவிரோதமான மீன்பிடி முறைகளைப் பாவிக்கின்ற நிலைமையும் இருக்கின்றன.

இவ்வாறாக தென்னிலங்கை மீனவர்கள் மேற்கொள்கின்ற சட்டவிரோத அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு கடற்படையினர், பொலிஸார், அரசு என அனைவரும் ஒத்துழைப்பாக இருக்கின்றனர். அவ்வாறு சகலரதும் ஒத்துழைப்பு இருக்கின்ற காரணத்தினால் தான் துணிச்சலுடன் இவர்கள் இந்தத் தொழிலைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது.

ஆக சட்டங்கள் தென்னிலங்கையில் ஒருவிதமாகவும் வடக்கு – கிழக்கில் இன்னொருவிதமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதுதான் உண்மை.

ஆகவே சட்டவிரோதமான தொழிலை அல்லது ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டுமென்றால் ஒட்டுமொத்த மீனவர்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அவ்வாறு ஒட்டுமொத்த மீனவர்களும் ஒரு வாரத்திற்கோ ஒரு மாதத்திற்கோ கடலுக்குப் போகமாட்டோம் என்று சொன்னால் – இந்த அரசு அதற்குப் பின்பும் அதனைச் செய்யுமாக இருந்தால் – நிச்சயமாக அதனைக் கேள்வி கேட்பதற்கு சர்வதேச சமூகமோ அல்லது அயல் நாடுகளோ அல்லது மனித உரிமைகள் பற்றி பேசக் கூடியவர்களோ பல பேர் முன்வரலாம். – என்றார். (ஐ–07)

# வெறுப்பு, அவதூறுக் கருத்துக்களை சமூக ஊடகங்களில் நீக்க அதிகாரம்

## பாதுகாப்பு அமைச்சுக்கு விரைவில் கிடைக்கும்

கொழும்பு, ஜன. 25

வெறுப்பு மற்றும் அவதூறு கருத்துக்களை சமூக ஊடகங்களில் பகிரப்பட்டால் அவற்றை உடனடியாகவே நீக்குவதற்கான அதிகாரத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு வழுங்கும் சட்டவரைவை தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

இணையத்தள தாக்குதலைத் தடுப்பதற்காக இணையத்தள பாதுகாப்பு (Cyber security act) சட்டவரைவை அரசு தயாரித்துள்ளது.

சமூக ஊடகங்களில் அவதூறான விடயங்கள் மற்றும் தவறான கருத்துக்கள் பதிவு செய்யப்படுவதை தடுப்பதற்கும் அவ்வாறு பதிவு செய்யும் விடயங்களை உடனடியாக நீக்கிவிடுவதற்கான பொறிமுறை ஒன்றை பாதுகாப்பு அமைச்சுக்குச் சட்ட ரீதியில் வழுங்குவதற்கு இந்த புதிய சட்டவரைவு வழிவகுக்கும்.

குறிப்பாக மதம், இனம் உள்ளிட்டவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சமூக இணையத்தள செயற்பாடுகளைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இந்தச் சட்டம் கட்டமைப்பு தேசிய இணையத்தள பாதுகாப்பு மூலோபாயத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பிரிவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்படுவதன் ஊடாகக் குற்றச்செயல் தொடர்பான விடயங்கள், தேசிய பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்களை தடுப்பதே இதன் நோக்கமாகும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்னவின் அறிவுறுத்தலுக்கு அமைய இலங்கை அவசர கணனி பாதுகாப்புப் பிரிவு (Sri Lanka Computer Emergency Readiness Team) இணையத்தளப் பாதுகாப்புச் சட்டவரைவை தயாரிக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்தப் பிரிவின் அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்றதுடன் தயாரிக்கப்பட்டுள்ள சட்டம் தொடர்பான ஆவணமும் கையளிக்கப்பட்டுள்ளது – என்றுள்ளது.



# டோனியின் எதிர்காலம் கோஹ்லி கையில்தான்!

இந்திய நட்சத்திர வீரர் டோனியின் எதிர்காலம் விராட் கோஹ்லி கையில் தான் உள்ளது என சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

2019 ஐ.பி.எல். தொடருக்கு பின் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக ஓய்வில் சென்ற ரெய்னா, தற்போது எதிர்வரும் 2020 ஐ.பி.எல். சென்னை அணிக்காக களமிறங்க தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் பத்திரிகை ஒன்றிற்கு பேட்டியளித்த ரெய்னா, டோனியின் எதிர்காலம் குறித்து கூறிய வை வருமாறு:-

ஐ.பி.எல்லுக்கு முன்னர் பயிற்சி பெற டோனி மார்ச் முதல் வாரத்தில் சென்னைக்கு வருவார்.

இப்போது, அவர் தனது குடும்பத்தினருடன் நிறைய நேரம் செலவிடுகின்றமையைப் பார்ப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

அவர் கிரிக்கெட்டை விட்டு வெளியேற விரும்பி னால், அவர் பெரிய பிரச்சினை செய்யாமல் செல்வார்.

அவர் தொடர்ந்து விளையாடுவதை நான் காண விரும்புகிறேன். அவர் உடல் தகுதியுடன் இருக்கிறார் மற்றும் கடுமையாக பயிற்சி செய்து வருகிறார்.

இந்திய அணிக்கு அவர் தேவை என்று நான் நினைக்கிறேன். ஆனால், விராட் கோஹ்லியின் முடிவே அதை தீர்மானிக்கும்.- என கூறினார்.

தனது எதிர்காலம் குறித்து கருத்து தெரிவித்த ரெய்னா, நான் இப்போது எந்த இலக்கையும் நிர்ண யிக்கவில்லை. ஐ.பி.எல்லில் என்னால் சிறப்பாகச் செய்ய முடிந்தால், நான் எவ்வாறு இருக்கிறேன் என் பதைப் புரிந்து கொள்ள முடியும்.

எனவே எனது ரி-20 உலகக்கிண்ண நம்பிக்கைகள் ஐ.பி.எல்லில் எனது செயல்திறனைப் பொறுத்தது.

எனது முழங்காலை வலிமையாக்கி, ஐ.பி.எல் தொடரில் சிறப்பாக விளையாட முடியும் என்றால், எனக்கு இன்னும் 2-3 வருட கிரிக்கெட் வாழ்க்கை உள் ளது என்பதை நான் அறிவேன் என கூறியுள்ளார்.

# சிட்னி சிக்ஸர்ஸ் அபார வெற்றி!



பிக் பேஷ் ரி-20 தொடரின் 48ஆவது லீக் போட்டியில், சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8 விக்கெட்டு களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

பிரிஸ்பேன் மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் சிட்னி சிக்ஸர்ஸ் அணியும், பிரிஸ்பேன் ஹீட் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிட்னி சிக்ஸர்ஸ் அணி, முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய பிரிஸ்பேன் ஹீட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 126 ஓட்டங் களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேம்ஸ் பெட்டின்சன் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்க ளையும், ஏபி டிவில்லியர்ஸ் 25 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சிட்னி சிக்ஸர்ஸ் அணியின் பந்துவீச்சில், ஜெக் ஸன் பேர்ட், டொம் கர்ரன் மற்றும் பென் டிவார் சுயிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், ஸ்டீவ் ஓகீப் மற்றும் நாதன் லியோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 127 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய சிட்னி சிக்ஸர்ஸ் அணி, 15.5 ஓவர்கள் நிறைவில் 2 விக் கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் சிட்னி சிக்ஸர்ஸ் அணி 8 விக்கெட்டு களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங் களாக, ஜோஷ் பிலீப்பே ஆட்டமிழக்காது 52 ஓட் டங்களையும், ஜேம்ஸ் வின்ஸ் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பிரிஸ்பேன் ஹீட் அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் பெட்டின்சன் மற்றும் பென் லாப்லீன் ஆகி யோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, சிட்னி சிக்ஸர்ஸ் அணி சார்பில் 1 விக்கெட்டை வீழ்த்திய ஸ்டீவ் ஓகீப் தெரிவு செய்யப்பட்டார்.

# சிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட்: இலகுவாக வெற்றி பெற்றது இலங்கை

சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இலகு வான வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற் கொண்டுள்ள திமுத் கருணாரத்ன தலைமை யிலான இலங்கை கிரிக்கெட் அணியானது சிம்பாப்வேயுடன் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

ஹரேயில் ஆரம்பான முதல் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம் பாப்வே அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 358 ஓட்டங்களைப் பெற்றது.


பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, அஞ் சலோ மெத்தியூஸின் இரட்டை சதத்துடன் 9 விக்கெட்டுக்களை இழந்து 515 ஓட்டங்க ளைக் குவித்து ஆட்டத்தை நிறைவு செய்தது.

இதன்மூலம் 157 ஓட்டங்களினால் பின் தங்கியருந்த சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்ஸில் 92 ஓவர்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 170 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

இதன்மூலம் இலங்கை அணிக்கு வெற்றியிலக்காக வெறும் 14 ஓட்டங்களை மாத்திரமே சிம்பாப்வே அணியினரால் நிர்ணயிக்க முடிந்தது.

இந்நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்து 10 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின்மூலம் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.





# லிவர்பூல் அணி வெற்றி!

இங்கிலீஷ் பிரிமியர் லீக் உதைபந்து தொடரின் வோல்வ்ஸ் அணிக்கெதிரான போட்டியில், லிவர்பூல் அணி 2 - 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

மோலினேக்ஸ் விளையாட்டரங்கில் உள் ளூர் நேரப்படி நேற்று நடைபெற்ற இப்போட் டியில், லிவர்பூல் அணியும், வோல்வ்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை பரிசளித்த இப்போட்டியில், இரு அணிகளும் முதல் கோலை போட களத்தில் முட்டி மோ திக் கொண்டன.

பரபரப்பாக நகர்ந்த இந்தப்போட்டியில், லிவர்பூல் அணி முதல் கோலை புகுத்தி, அரங்கில் குழுமியிருந்த தங்களது இரசிகர் களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தியது.

அணியின் ஜோர்தான் ஹெண்டர்சன் போட்டியின் 8ஆவது நிமிடத்தில் இந்தக் கோலை புகுத்தி, அணியை 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற செய்தார்.

இதனைத் தொடர்ந்து, பதில் கோல் போடவேண்டுமென்ற முனைப்பில் வோல்வ்ஸ் அணி, ஆக்ரோமாக விளையாடியது.

எனினும், முற்பாதியில் வோல்வ்ஸ் அணி யால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முற்பாதியில் லிவர்பூல் அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் முன்னிலைப் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது பாதியில், இரண்டு அணிகளும் கோல் போட கடுமையாக களத்தில் போராடின.

எனினும், இம்முறை கோல் போடும் வாய்ப்பு வோல்வ்ஸ் அணிக்கு கிடைத் தது. அணியின் ரால் ஜிமெனெஸ் போட்டியின் 51ஆவது நிமிடத்தில் இந்த கோலை அடித்து, 1-1 என்ற கணக்கில் கோல் கணக்கை சமநிலைப்படுத்தினார்.

இதனால் போட்டி பரபரப்படைந்து, முன் னிலை கோலை புகுத்தப் போவது யார் என்ற கேள்வி இரசிகர்கள் மத்தியில் அதிகரித்தது.

இரு அணிகளும் கோல் போடுவதற்கு கடுமையாக முயற்சித்தன. எனினும் அந்த அதிஷ்டம் போட்டியின் 84ஆவது நிமிடத் தில் லிவர்பூல் அணிக்குக் கிடைத்தது. இந்த வெற்றி கோலை அணியின் நட்சத்திர வீர ரான ரொபேர்டோ பெர்மினோ அடித்தார்.

இதனைத் தொடர்ந்து இரு அணிகளும் கோல் அடிக்க முயற்சித்த போதும், அது பல னளிக்கவில்லை. இதனால் இறுதியில் லிவர் பூல் அணி 2 - 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் லிவர்பூல் அணி, புள்ளிப் பட்டியலில் 67 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் ஆதிக்கம் செலுத் துகின்றது.

நடப்பு தொடரில், இதுவரை 23 போட்டிகளில் விளையாடியுள்ள லிவர்பூல் அணி, 22 வெற்றிகள், 1 சமநிலை என 67 புள்ளிகளுடன் புள்ளிப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

தோல்வியை தழுவிய வோல்வ்ஸ் அணி, 24 போட்டிகளில் விளையாடி 8 வெற்றிகள், 10 சமநிலை, 6 தோல்விகள் அடங்களாக 34 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளது.

# தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் செயற்பாட்டில் சிங்கள இனவாதிகள்

## கஜேந்திரன் குற்றச்சாட்டு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜன. 25

இலங்கைத் தீவு தங்களுக்கே சொந்தமானது என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகளைச் சிங்களப் பேரினவாதிகள் முன்னெடுத்து வருகின்றனர் எனச் சாடியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், அதனை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பை எம்மவர்களின் துணையுடன் கோட்டாபய அரசு கொண்டு வந்து நிறைவேற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான வட்டமேசைக் கலந்துரையாடல் யாழ். ரில்கோ ஹோட்டலில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தத் தீவை சிங்கள பௌத்த பேரினவாதிகள் தங்களுக்குச் சொந்தமானது என்ற அடிப்படையில் தாங்கள் சௌகரியமாக வாழ்வதற்கு எங்களை இல்லாமல் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் செயற்படுகின்றார்கள். இங்கிருக்கின்றவர்களை அவர்கள் மனிதர்களாகவே கருதவில்லை என்பதுதான் உண்மையான விடயமாக இருக்கின்றது.

இங்கு பல்லாயிரக்கணக்கான எங்கள் மீனவர்கள் தங்கள் தொழிலை – வாழ்வை இழக்கின்றார்கள். ஒருவர் இருவர் என்றில்லாமல் பல ஆயிரக்கணக்கில் எமது மக்கள் பாதிக்கப்படுகின்றபோது அது குறித்து அரசு கருத்தில் கொள்வதில்லை என்றால் இந்தத் தீவு சிங்கள பௌத்தர்களின் தீவு என்ற அடிப்படையிலே திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றமை தெளிவாகிறது.

தங்கள் அந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வடக்கு – கிழக்கில் இருக்கக்கூடிய சிலரை கைகளுக்குள் வைத்துக்கொண்டு அவர்கள் கேட்கும் சிலதைச் செய்வது போல் ஒரு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் தங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டிலே பல ஆயிரம் பேர் சொந்தக் காணிகள் இல்லாமல் இருக்கின்றபோது நாவற்குழியில் உள்ள அரச காணியில் இந்த மாவட்டத்தோடு எந்தச் சம்பந்தமும் இல்லாத தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மக்கள் கொண்டு வந்து குடியேற்றப்பட்டார்கள்.

அதற்கு அரசுடன் சேர்ந்து எம்மவர்களும் துணைபோயிருந்தார்கள். அதேபோல வவுனியாவில் ஒரு தமிழ்க் கிராமம் அபகரிக்கப்பட்டுச் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு உறுதி வழங்கப்பட்டது. அதற்கு எம்மவர்களும் இணைந்து ஆதரவைக் கொடுத்தார்கள். இவ்வாறுதான் ஆக்கிரமிப்பும் அபகரிப்பும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு எம்மவர்களும் துணைபோய்க் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் தற்போது 13 மற்றும் 13 பிளஸ் மற்றும் 13 மைனஸ் பற்றியெல்லாம் பேசப்படுகிறது. இதில் அது வேண்டாம், இது வேண்டும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் சத்தமில்லாமல் பட்டவர்த்தனமாக சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தக் கூடியதாக தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் பறித்தெடுக்கக் கூடிய செயற்பாடுகள் நடக்கின்றன.

இந்த நாட்டை பௌத்த நாடாக ஏற்றுக் கொள்கின்ற அரசமைப்பொன்று நாடாளுமன்றத்தில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணியில் ஈடுபட்ட வடகிழக்கைச் சேர்ந்த அனைவரும் அதற்கு ஒத்துழைப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகையினால் நடைபெறவிருக்கும் தேர்தலுக்குப் பின்னர் கோட்டாபயவினால் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவோடு – அதாவது இதைத் தயாரித்தவர்களின் ஆதரவோடு கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட இருக்கிறது. அவ்வாறு நிறைவேற்றப்படுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கு அது பாரிய ஆபத்தாக அமையும். அவ்வாறு நிறைவேறினால் குறிப்பாக மீனவர்கள் இந்த தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்குப் போவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். ஏனென்றால் கடல் ஆதிக்கம் முற்று முழுதாக தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்றது. ஆகையினால் அதன் ஆபத்தை அனைவரும் விளங்கிக் கொள்ளவேண்டும் – என்றார். (ஜ – 07)

# ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக கரு ஜயசூரிய?

## ஐக்கிய தேசிய முன்னணி தலைவராக சஜித்

கொழும்பு, ஜன. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்காலிகத் தலைவராக கரு ஜயசூரிய நியமிக்கப்படவுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நியமிக்கப்படவுள்ளார்.

இதன்மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ நெருக்கடி தற்காலிகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குமிடையில் நடந்த பேச்சின் விளைவாக இழுபறி நிலை தற்காலிகமாக முடிவுக்கு வந்துள்ளது.

ஏற்படுத்தப்பட்டுள்ள இணக்கப்பாட்டின்படி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சபாநாயகர் கரு ஜயசூரியவும், ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் நியமிக்கப்படுகின்றனர்.

இரண்டு அமைப்புக்குமான சிரேஷ்ட தலைவராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவார். சபாநாயகருக்கும் கட்சியின் தலைவருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் எட்டப்பட்டுள்ள இந்த இணக்கப்பாடு தொடர்பில், இன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவருக்கு இருவரும் விளக்கமளிப்பார்கள் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில், சஜித் பிரேமதாஸ அணியிலிருந்து 38 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கு மாறியுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, தலைமைத்துவ நெருக்கடிக்குப் புறம்பாகப் புதிதாக ஏற்பட்டிருந்த பிரதமர் வேட்பாளர் சர்ச்சை குறித்துத் தற்போதைக்குப் பேச்சு நடத்துவதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதலில் தலைமைத்துவப் பிரச்சினையைத் தீர்த்துவிட்டுப் பின்னர் தேர்தல் நெருங்கும்வேளை அதுபற்றிச் சிந்தித்து முடிவெடுக்க முடியும் என்று ரணில் விக்கிரமசிங்க கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள இப் புதிய இணக்கத்திற்கமைய ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய செயற்குழுவைத் தெரிவு செய்யும் பணி எதிர்வரும் திங்கட்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் பி.பெரேராவும் விஜயபால ஹெட்டியாராச்சியும் நாடாளுமன்றத்தில் செய்தியாளர்களிடம் அறிவித்தனர்.

தமது எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும் தேர்தல் நடவடிக்கை பற்றியும் சஜித் பிரேமதாஸ நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் கூட்டத்தில் எடுத்துரைப்பாரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் தொடர்பில் தமது தரப்பிற்கு எவ்விதமான உத்தியோகபூர்வ அறிவித்தலும் கிடைக்கப்பெறவில்லையென்று சஜித் பிரேமதாஸ தரப்பின் ஊடகப் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார். (ஐ)

# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு!

மட்டக்களப்பு–பாலமடுப் பகுதியில் காட்டு யானையொன்று தாக்கியதில் வயோதிப விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வந்தாறுமூலை பிரதான வீதியை அண்டி வசித்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சீனித்தம்பி கோவிந்தராசா (வயது 64) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சீனித்தம்பி கோவிந்தராசா தனது நெல் வயலில் காவலில் ஈடுபட்டிருந்த வேளை, அப்பகுதிக்கு வந்த காட்டு யானை அவரைத் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்தது.

உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.




# யாழ். அரும்பொருள் காட்சியகம் நாவற்குழியில் இன்று திறப்புவிழா



யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் முதன்முறையாக சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான நாவற்குழியில் இன்று சனிக்கிழமை இந்த அரும்பொருள் காட்சியகம் பொதுமக்கள் பார்வைக்காகத் திறக்கப்படுகிறது.

சுமார் 12 பரப்புக் காணியில் 3 மாடிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் நுழைவாயிலைச் சங்கிலிய மன்னன், எல்லாள மன்னன் இருவரின் உருவச் சிலைகள் அலங்கரிக்கின்றன. உள்ளே யாழ்ப்பாணப் பேரரசை ஆட்சி செய்த 21 மன்னர்களின் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த மன்னர்கள் அனைவருக்கும் உருவச் சிலை அமைப்பது வரலாற்றில் இதுவே முதன் முறையாகும்.

அதுமட்டுமன்றி எமது முன்னோர்கள் பயன்படுத்திய வண்டிகள், கூடார வண்டில், திருக்கை வண்டில், சவாரி வண்டில் உட்பட போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன.

1950ஆம் ஆண்டுக்கு முன்னர் வெளிவந்த 17 மோட்டார்க் கார்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

தட்டி வான் என்று சொல்லப்படுகின்ற 2ஆம் உலகப் போருக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் அறிமுகமான மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்திய வாகனம் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளது.

முதலாவது தளத்தில் தமிழர் பாரம்பரியத்தோடு தொடர்புடைய பாரம்பரியமான பொருள்கள், யாழ்ப்பாணத்தில் தமிழர் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பித்தளைப் பாத்திரங்கள் தொடக்கம் ஆரம்பகாலத்தில் வெளிவந்த கடிகாரம், வானொலிப் பெட்டி, முன்னோர் பயன்படுத்திய அருவி வெட்டும் கருவி, போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்து நாணயங்கள், அதன்பின்னர் வெளிவந்த ஆங்கிலேயர் காலத்து நாணயங்கள், ஆங்கிலேயர் காலத்தில் யாழ்ப்பாணம் உட்பட நாடுமுழுவதும் உள்ள பகுதிகளின் ஒளிப்படங்கள் என இவை எல்லாம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இரண்டாவது தளத்தில் ஈழத்துப் புலவர்கள், பண்டிதர்கள், பாவலர்கள், பாடசாலைகளை நிறுவிய நிறுவுநர்கள் மற்றும் எமது சமய, கலாசார நிகழ்வுகளான சூரன்போர், நல்லூர் கந்தசுவாமி ஆலய மிகப் பழமை வாய்ந்த தோற்றங்கள், நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றை வெளிப்படுத்தும் பெயர்கள், கீரிமலை நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், கோணேஸ்வரம் உள்ளிட்ட ஆலயங்களின் ஆதி ஒளிப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

1800ஆம் ஆண்டுகளிலிருந்து யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் முதலாம் நாள் வெளிவந்த பத்திரிகைப் பிரதிகளின் முன்பக்கம் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சுமார் 3 ஆயிரம் ஒளிப்படங்களைக் கொண்டு இரண்டாவது தள மாடியில் வரலாற்று அடையாளங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மூன்றாவது தளத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்திரமும் வடிவமைப்பும் மாணவர்களால் வரையப்பட்ட மரபு ரீதியான ஓவியங்கள், தமிழர் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இவ்வாறு ஒரு பிரமாண்டமான அரும்பொருள் காட்சியகமாக இது உருவாக்கப்படவுள்ளது. (ஐ - 07)



# ஈழத் தமிழர்கள் ....

08ஆம் பக்கத் தொடர்ச்சி

அப்போது தமிழ் மக்கள் அதனை ஓர் உள்நாட்டுப் பரிமாணம் கொண்ட சிக்கலாகவே பார்த்தார்கள். அவர்கள் இந்தியாவை நாடவில்லை. அப்போது ஈழத் தமிழர்களை இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தி தமிழருக்கான உரிமையை மறுத்தது சிங்கள ஆட்சியாளர்கள்தான்.

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை கலவரத்தை பண்டாரநாயக்க அரசாங்கம் நடத்தியபோது அன்றைய இந்திய பிரதமர் நேருவின் தலையீட்டின் பெயரில் அந்தப் படுகொலையை இலங்கை அரசு தொடரமுடியாது நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை இனப்படுகொலையின்போது அதனைத் தொடர்ந்து கொண்டிருந்த ஜெயவர்த்தன அரசாங்கத்திற்கு எதிராக அன்றைய இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி மேற்கொண்ட காட்டமான அரசியல் – இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமே அதை நிறுத்த முடிந்தது.

எப்படியோ தற்போது ஈழத் தமிழர்களின் விவகாரம் இந்தியா – சீனா – அமெரிக்கா உள்ளிட்ட அரசுகளின் நலன்களோடும் அவர்களின் பிரச்சினைகளோடும் பின்னிப் பிணைந்துவிட்டது. ஆதலால் இதனை அத்தகைய அரசுகளோடு தொடர்புபடுத்தாமல் இனிமேல் ஒரு போதும் அணுகமுடியாது.

இத்தகைய பின்னணியில்தான் விக்னேஸ்வரனின் கருத்தும் நிலைப்பாடும் முக்கியத்துவம் பெறுகிறது. சென்னைக்கு அவர் மேற்கொண்ட பயணம் அவர் எதிர்பார்த்திருக்கக் கூறியதையும்விட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

அவரின் பயணத்திற்கு இந்திய ஊடகங்களும் இந்திய அரசியல்வாதிகளும் கொடுத்த முக்கியத்துவம் பெரிதும் கவனத்துக்குரியது. அவரது கருத்துக்கள் இந்தியத் தரப்பில் – குறிப்பாக மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் – அதிகம் சிரத்தைக்கு உரியவையாகக் காணப்பட்டன.

ஈழத் தமிழரின் நலனுக்காகத்தான் இந்தியா ஈழத்தமிழருக்கு உதவ வேண்டும் என்ற ஒரு பொதுவான கருத்துநிலையும் கண்ணோட்டம் இந்திய மக்களிடம் பரவலாக உண்டு.

ஆனால் அதற்கும் அப்பால் இந்தியாவின் நலன் ஈழத் தமிழரின் நலனோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது என்ற கருத்தை இந்திய மக்கள் மத்தியில் உணர்த்தும் வகையில் விக்னேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சாத்வீகமான ஒரு தலைவர் என்கின்ற வகையில் விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் அதிகம் இந்திய ஊடகங்களாலும் மக்களாலும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் நிலை காணப்படுகிறது.

அவர் தெரிவித்திருக்கும் அந்தக் கருத்துக்கள் அன்றோடு முடிந்திருக்கக் கூடியவையல்ல. அவை நின்று, நிலைத்து மக்கள் மத்தியிலும், ஊடகங்கள் மத்தியிலும், அரசியல் தலைவர்கள் மத்தியிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்த வல்லவை என்பதில் சந்தேகமில்லை.

இலங்கை அரசியலும் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினையும் தெளிவாக சர்வதேச அரசியலின் எரிதணலுள் பிரவேசித்து விட்டன. இனி அதனை சர்வதேச உலைக் களத்தில் இருந்து சிறிதும் பிரித்துப் பார்க்க முடியாது. இத்தகைய நிலையில் சர்வதேச உலைக் களத்தில் இருந்து தமிழின விடுதலையை வார்ப்புச் செய்ய வல்ல திறனையும் ஆற்றலையும் காட்ட வல்ல தமிழ் தலைவர்கள் யார்?

விக்னேஸ்வரனின் கருத்து ஒரு நொதியத்தை( Catalyst) ஊக்கியை ஏற்படுத்தியிருக்கிறது. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தமிழ் தலைவர்கள் இந்தியாவை நோக்கி நேசக்கரம் நீட்டும் நிலமை வளர்ந்து செல்வதையும் அவர்களின் அண்மைக்கால கருத்துக்கள் வாயிலாகக் காணலாம். சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட மற்றும் தலைவர்களும் இந்தியாவுக்கு நெருக்கமானவர்கள் என்ற கருத்து ஏற்கனவே இருப்பதும் இத்துடன் இணைத்துப் பார்க்கப்படத்தக்கது.

China stands for the country's sovereignty, territorial integrity and independence. We will not allow any outside influences to interfere with the matters that are essentially internal concerns of Sri Lanka என்று சீன வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி மேலும் கூறியதை ஆழ்ந்து நோக்க வேண்டியது அவசியம்.

இனப்பிரச்சினையை இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று வரையறை செய்யும் சீனா, மேற்படி கூறியுள்ள 'teritorial intergrity' என்ற பதத்தின் வாயிலாக தமிழ் மக்களுக்கு சமஷ்டி முறையிலான தீர்வு கிடையாது என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை ஆதரித்து வலியுறுத்துவதாய் அமைந்திருக்கிறது.

மேலும் இங்கு சீனா தெரிவித்துள்ளது இலங்கை அரசின் 'sovereignty' , என்ற வார்த்தைகும் மற்றும் 'outdise influences'n சீனா அனுமதிக்காது என்ற வார்த்தைக்கும் தமிழினத்தின் மீது இலங்கை அரசு மேற்கொள்ளவல்ல இன ஒடுக்குமுறை, இன அழிப்புக்களை சீனா ஆதரித்து நிற்கின்றது என்பதுமே பொருளாகும்.

அத்துடன் இங்கு 'outside influences' என்று சினா கூறுவதன் முதல் பொருள் இந்தியாவை நோக்கியதாகவும் அடுத்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளை நோக்கியதாகவும் அமைந்துள்ளது. சீனாவின் மேற்படி கருத்தில் இலங்கை தொடர்பான அதன் நிலைப்பாடு, தமிழின அழிப்பு தொடர்பான அவன் நிலைப்பாடு, சர்வதேச அரசியல் தொடர்பான அதன் நிலைப்பாடு என்பன தெளிவாக உள்ளன.

'இறைமை'(sovereignty), 'உள்நாட்டு விவகாரம்' (international matters ) என்ற பதங்களுக்கு இலங்கை அரசின் அரசியல் அகராதியில் இருக்கும் அர்த்தம் தமிழினத்தை இனப்படுகொலை செய்ய எனக்கு அதிகாரம் உண்டு , அதில் எந்த வொரு வெளிநாடும் தலையிட முடியாது, தலையிடக் கூடாது என்பதாகும்.

19ஆம் நூற்றாண்டில் ஹொங்கொங் துறைமுக நகரை 99 வருட குத்தகைக்கு பிரித்தானியா எழுதிக் கொண்டது. அதனை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு என்று கூறி அதற்கெதிராச் செயற்பட்டுவந்த சீன நாடானது இன்று இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுக நகரை 99 வருட குத்தகைக்கு எழுதி வைத்துக்கொண்டு இலங்கை அரசுடன் கைகோர்த்து அதன் தமிழின அழிப்பு கொள்கையை ஆதரித்து உதவுவதான நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இந்த இன அழிப்புக் கொள்கையில் மையம்கொண்டுதான் சீனா அரசு இலங்கை அரசுடன் தனது உள்நாட்டு வெளிநாட்டு ரீதியான உறவுகளை வடிவமைத்துள்ளது. இத்தகைய கண்ணோட்டத்துடன்தான் இனி வரப்போகும் காலங்களில் காணப்படக்கூடிய இலங்கை – இந்திய – சீன – அமெரிக்க உறவுகளையும் தமிழர்களின் இனப்பிரச்சினையையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆதலால் உள்நாட்டு , வெளிநாட்டு அர்த்தத்தில் வரப்போகும் சில ஆண்டுகள் இலங்கை அரசியலிலும், ஈழத் தமிழர் விவகாரத்திலும் தீர்க்கமான கட்டமாய் அமையும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. இதனை எதிர்கொள்ளவும் கையாளவும்வல்ல அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும், திறனையும், புத்திசாதுரியத்தையும் தமிழ் தலைவர்கள் காட்டுவார்களா என் பதிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# எரிபொருள் விலை அதிகரிக்கப்படாது

கொழும்பு, ஜன. 25

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானம் மேற்கொள்ளவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசு நாட்டின் மின்சார தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பல திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

2024ஆம் ஆண்டு மின்சார சபை இலாபத்துடன் இயங்கக்கூடியதாக அபிவிருத்தி செய்யப்படும்.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. இருப்பினும் நாட்டில் எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை.

அத்துடன், கடந்த செவ்வாய்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கட்சி தலைவர் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது அடுத்த வாரம் மீண்டும் கட்சித் தலைவர் கூட்டத்தைக் கூட்டி 'ஸ்ரீலங்கா சுதந்திர பொதுஜன முன்னணி' கூட்டணி அமைத்தலில் காணப்படும் சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்துமாறு ஆலோசனை வழங்கினார்.

அதற்கமைய எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கட்சித் தலைவர் கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கூட்டணியின் சின்னம் என்பன தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதியளவில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வும் வழங்கப்படும்.

ரஞ்சன் ராநாயக்கவின் குரல் பதிவுகளால் நாட்டின் நீதித்துறை, நாடாளுமன்றம் மற்றும் பாதுகாப்புத்துறை என்பன பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

மக்கள் மத்தியில் நீதித்துறை மீது காணப்படும் நம்பிக்கை இல்லாமல் போவதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. இவ்விடயம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ஐ)

# சஜித்தின் தலைமையில் கூட்டணி அமைக்கும் முயற்சி ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 25

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான புதிய அரசியல் கூட்டணி ஒன்றை உடனடியாக ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டபோதும் இறுதி நேரத்தில் காலவரையின்றி அது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேபோல ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை கோரும் சஜித்தின் முயற்சிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அறியமுடிந்தது.

தனது அரசியல் எதிர்காலம் குறித்து சஜித் பிரேமதாஸ பெற்ற சோதிட ஆலோசனைகளின் பிரகாரம் இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை ராஜினாமா செய்திருந்த சூழ்நிலையில் அதனை மீண்டும் சஜித்துக்கு வழங்கக் கட்சித் தலைவர் ரணில் தீர்மானித்துள்ளார். (ஐ)

# கிஹான் பிலப்பிட்டிய விவகாரம்; 5 பேர் அடங்கிய குழு நியமனம்

கொழும்பு, ஜன. 25

மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் விடுத்த பணிப்புரை குறித்து ஆராய்வதற்காக 5 பேர் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்கிரமரத்னவினால் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றப் பிடியாணையைப் பெற்று மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவின் பணிப்பாளருக்கு இவ்வாறு உத்தரவிட்டிருந்தார்.

கொழும்பு பிரதம நீதவானாகக் கடமையாற்றிய காலப் பகுதியில், நீதிமன்ற விசாரணையில் காணப்பட்ட வழக்கு ஒன்று தொடர்பாக ரஞ்சன் ராமநாயக்கவுடன் தொலைபேசியில் கலந்துரையாடிய குற்றச்சாட்டில் சட்டமா அதிபரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மூவர் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழு ஒன்றைப் பதில் பொலிஸ் மா அதிபர் சீ.டி. விக்கிரமரத்ன நியமித்துள்ளார். (ஐ)

# துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சாவு! இருவர் காயம்!!

## மொனராகலையில் சம்பவம்

கொழும்பு, ஜன. 25

மொனராகலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்துள்ளனர்.

பிபில, பிட்டகும்புர பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாகவே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன்போது காயமடைந்த இருவரும் சிகிச்சைகளுக்காக பிபில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைது செய்யப்படாத நிலையில், அவரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

# உலகை உலுக்கிவரும் பாம்பு வைரஸ் தொற்று; வடக்கு மக்களும் விழிப்போடு இருக்கவேண்டும்

## மருத்துவர் யமுனாந்தா கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 25

சீனாவை தாக்கி அங்கு மக்களை உயிரெடுத்து வரும் கொரோனா வைரஸ் தற்போது அமெரிக்கா, தாய்லாந்து, சவுதி உள்ளிட்ட நாடுகளுக்கும் தொற்றியுள்ளது. எனவே வடக்கு மாகாணத்திலும் இந்த தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு விழிப்போடு இருக்கவேண்டும்

– இவ்வாறு மருத்துவர் சி. யமுனானந்தா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

தற்போது உலகம் முழுவதும் அச்சம் ஏற்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் என்ற சுவாசத் தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. இந்தக் காய்ச்சல் சீனாவில் பரவுகின்றது.

இந்த கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவும் அபாயம் உள்ளதால் உலக சுகாதார நிறுவனம் மிகவும் விழிப்பாக உள்ளது. இன்னும் அபாயக் கட்டத்தை எட்டவில்லை.

பன்றிக் காய்ச்சல், பறவைக் பாய்ச்சல் என்பது போல் இந்தத் தொற்றை பாம்புக் காய்ச்சல் என நாம் கூறலாம். நாக பாம்பிலிருந்து இந்த வைரஸ் மனிதனுக்கு சுவாசம் ஊடாகப் பரவி தற்போது வேகமாகத் தொற்றிவருகிறது.

சீனாவில் இந்த வைரஸ் காரணமாக ஓர் மாகாணத்தைச் சேர்ந்த மக்களை வேறு மாகாணங்களுக்குச் செல்லாதவாறு கட்டுப்பாடுகளைப் போட்டுள்ளனர்.

இந்தத் தொற்று நோயின் அறிகுறிகளாக சாதாரண தடிமன், தொண்டை நோ மற்றும் இருமல் இருக்கின்றன. இந்த தொற்றுக்குள்ளாகியவர்கள் சுவாசப் பாதிப்பு ஏற்பட்டு 10 பேரில் நால்வர் இறக்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொற்றுக்கு மருந்துகள் இல்லை. அதனால் கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். சீனாவில் மக்கள் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

தற்போது இந்த நோய்த் தொற்று அமெரிக்கா, சவுதி அரேபியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நோய்த் தொற்று இலங்கையிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம். எனவே சுகாதார அதிகாரிகள், சிவில் அதிகாரிகள், பொதுமக்கள் போதிய விழிப்போடு இருக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் இந்த நோய்த் தொற்று ஏற்பட்டால் வைத்தியசாலை முடங்கும் நிலை ஏற்படலாம். எனவே மயிலிட்டி காசநோய் வைத்தியசாலையை யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் சீரமைத்து வழங்கினால், அவசர நிலையை சமாளிக்க முடியும்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்று மருத்துவ நிபுணர்கள் உள்ளனர். இந்தத் தொற்றுத் தொடர்பில் விழிப்போடு செயற்படுவதை நாம் தற்பொதே முன்னெடுத்துள்ளோம் – என்றார்.

(ஐ – 07)

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது





யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழ். நகரின் முற்றவெளி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ் வர்த்தக கைத்தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடைபெறும் யாழ். வர்த்தக கண்காட்சி இந்த முறையும் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண பொது நூலகத்தில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எச்.எம். சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆர்னல்ட் , யாழ் இந்திய துணைத் தூதுவர் பாலச்சந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஐ – 07)

# மிதக்கும் சூரிய மின் நிலையம் கிளிநொச்சியில் திறந்துவைப்பு





கிளிநொச்சி, ஜன. 25

இலங்கையின் முதலாவது மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் டிரைன் ஜெரான்லி எஸ்கெடாலினால் இந்த மின் உற்பத்தி நிலையம் நேற்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தின் பொறியியல் பீடத்தின் அனுசரணையில் இந்த மின் நிலையம் 3 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையத்தின் மூலம் 42 கிலோ வோற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் பயன்பாட்டு அறிவியலுக்கான மேற்கு நோர்வே பல்கலைக்கழகம் ஆகியன கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் ஆதரவுடன் கடந்த 2017ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டுவந்த ஆராய்ச்சி நடவடிக்கைகளின் விளைவாக இந்த மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மேற்கு நோர்வே பல்கலைக்கழக விரிவுரையாளர் தயாளன் வேலாயுதபிள்ளை, யாழ். பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி, யாழ். பொறியியல்பீட பீடாதிபதி அற்புதராஜா, தூதரக அதிகாரிகள், அனுசரணையாளர்கள் மற்றும் பொறியியலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# யாழ்ப்பாணம் டி.ஐ.ஜி. இடமாற்றம்!

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக செயற்பட்ட கே.கட்டுபிட்டிய, மேல் மாகாண தென் பிராந்தியத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். பொலிஸ் ஊடகப் பிரிவு அறிக்கையி லேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்படி பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இருவரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் 9 பேரும், பொலிஸ் அத்தியட்சகர்கள் 8 பேரும் இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் தென் பிராந்தியத்துக்குப் பொறுப்பாக செயற்பட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.எப்.எம்.சேனாரத்ன யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்ட கே.கட்டுபிட்டிய இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளார். (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.01.2020இல் வெளியிடப்பெற்றது.